Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 25, 2022

வெள்ளிக்கிழமை மார்ச் 25, 2022 | ஒளி: 07 கதிர்: 265 | பக்கம்:10 | நகரப்பதிப்பு ★ | FREE

பலகை வீட்டில் தீப்பிழம்பை கக்கிய காதல்

கட்டுகஸ்தோட்டையில் மூவர் கருகிப் பலி

■ சேஹன் செனவிரத்ன

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெனிக்கும்புரவத்த பிரதேசத்தில் மூன்று பேரை பலியெடுத்த தீ விபத்துக்கான காரணம் தெரியவந்துள்ளதாக, கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்த யுவதிக்கும் இளைஞருக்குமிடையிலான காதல் தொடர்பே, இந்தத் தீ பரவலுக்கான காரணம் என்றும், இச்சம்பவத்தில் உயிரிழந்த இளைஞனே தீயை மூட்டியிருப்பதாக ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

அரசாங்கத்தின் பெரும்பான்மைக்கு

"ஆப்பு வைப்பேன்"

விமல் சூளுரை; ரணிலிடம் ஆணவத்தை வெளிப்படுத்தினார் பசில் என்கிறார்

ஜனாதிபதி தலைமையில், நேற்று முன்தினம் (23) இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டின் போது முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கௌரவமான முறையில் பேசத் தவறியதன் மூலம், நிதியமைச்சர் பசில் தனது ஆணவத்தை வெளிப்படுத்தியதாகத் தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி, எதிர்வரும் காலங்களில் அரசாங்கம் 113 பெரும்பான்மையை இழக்கும் என்றார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களை நேற்று (24) சந்தித்த, அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 11 பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், 'தேசத்தை சரியான பாதையில் அழைத்துச் செல்வது' என்ற தேசிய வேலைத்திட்டத்தை அவர்களிடம் சமர்ப்பித்தனர்.

தொடர்ச்சி P2

இலங்கைத் தமிழர்களுக்கு விரைவில்

விடிவு காலம்

தமிழக அரசு ஏற்படுத்தும் என்கிறார் ஸ்டாலின்

இலங்கை தமிழர்களுக்கு, விரைவில் விடிவு காலத்தை, தமிழக அரசு ஏற்படுத்தித் தரும் என தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின், நேற்று (24) தெரிவித்துள்ளார் என, இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழக சட்டசபையில் உரையாற்றியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியுள்ளதாகவும் இந்தச் சூழலில், இலங்கை தமிழர்கள் அண்மையில் தமிழகத்துக்கு வரும் செய்தியை அறிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கோட்டா, பசிலை சந்தித்த ஒரு வாரத்தில்

IMF இன் ஆசிய பசுபிக் பணிப்பாளர் ஓய்வு

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தொடர்பில் கடந்த வாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்த சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பணிப்பாளர் சாங்யோங் றீ, ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

எரிவாயு வரிசையால்

வயோதிபர் மயக்கம்

தெஹிவளையிலுள்ள எரிவாயு விற்பனை நிலையத்தில் எரிவாயு பெறுவதற்காக வரிசையில் காத்திருந்த வயோதிபர் ஒருவர், எரிவாயு சிலிண்டர்கள் மீது மயங்கி விழுந்த சம்பவம், நேற்று (24) பதிவாகியது.

சம்பவ இடத்தில் இருந்த தெஹிவளை பொலிஸார் குறித்த முதியவரை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எரிவாயு பெற வந்த மக்களின் நீண்ட வரிசையில் நின்றிருந்த நிலையில், முதியவர் மயங்கி விழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் வங்கிமுறை ஸ்திரமாக உள்ளது

மத்திய வங்கி, நிதியமைச்சு அறிக்கை

இலங்கையில் வங்கி முறை ஸ்திரமாக இருப்பதாகவும், அரச வங்கிகளின் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதாகவும், இதுகுறித்து பொதுமக்களுக்கும் அனைத்து பங்குதாரர்களுக்கும் உறுதியளிக்க விரும்புவதாகவும் நிதி அமைச்சும் இலங்கை மத்திய வங்கியும், நேற்று (24) தெரிவித்தன.

அரச வங்கியொன்று பணம் செலுத்தத் தவறியதாகத் தெரிவிக்கப்படும் செய்தியை அறிந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, சபையில் நேற்று காலை தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2

10 நாள்களுக்குள் இலட்சம் சிலிண்டர்கள்

நெருக்கடி தீர 1 வாரம் செல்லும் என்கிறது லிட்ரோ

எதிர்வரும் 10 நாள்களுக்குள் 10 இலட்சம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்த லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க, லிட்ரோ நிறுவனம் தற்போது தொடர்ச்சியாக எரிவாயு விநியோகத்தை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மஹிந்தவின் பதாகை பெறுமதி

தமிழர் உயிர்களுக்கு இல்லை

வாக்குமூலத்தின் பின் நிரோஷ் சாடல்

■ தியாகராஜா நிரோஷ்

வரவேற்புப் பதாகைகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் கூட, தமிழர் உயிர்களுக்கு நாட்டில் கொடுக்கப்படவில்லை என்பதையே இன்றைய (நேற்றைய) வாக்குமூலம் வெளிப்படுத்துவதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ரயில் கட்டணங்கள் ரகசியமாக அதிகரிப்பு



வடக்கு மற்றும் பிரதான மார்க்கங்களில் பயணிக்கும் ரயில்களின் கட்டணம் நேற்று (24) முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்பு ஆசனங்களுக்கான முன்பதிவு கட்டணங்களும்

தொடர்ச்சி P2

3 முறை ஒத்திவைப்புக்கு பின்னர்

ஜனாதிபதியை இன்று சந்திக்கிறது த.தே.கூ

பல ஒத்திவைப்புகளுக்குப் பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு, இன்றையதினம் (25) இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சி P2

அத்தியாவசிய பொருட்களின் விலை 30-40% ஆல் உயர்வு

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக, இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை 30 முதல் 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன, தெரிவித்தார்.

சீனி, பருப்பு, அரிசி ஆகியனவற்றின் விலைகள் இவ்வாறு அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த அவர், இந்தியாவிலிருந்து கடனுதவி பெறப்பட்டதன் பின்னர், தற்போதுள்ள டொலருக்கான கேள்வி குறைவடையும் என தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய 1,500 கொள்கலன்கள், கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாகவும் இந்தியாவின் 1 பில்லியன் டொலர் கடனுதவியைக் கொண்டு அவற்றை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

தெரிவுக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

தேர்தல், வாக்களிப்பு முறைமை, சட்ட ஒழுங்கு மறுசீரமைப்பு தொடர்பில் தேவையான திருத்தங்களை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது என, சபாநாயகர் அலுவலகம் தெரிவித்தது.

எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி வரை விசேட தெரிவுக்குழுவின் பதவிக்காலத்தை நீடிக்க பாராளுமன்றத்தின் அனுமதி கிடைத்துள்ளது.

தொடர்ச்சி P2

அமைச்சரின் சாரதி படுகொலை

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு விளக்கமறியல்

வலுச்சக்தி அமைச்சர் காமினி லொகுகேவின் சாரதி அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரையும் எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கெஸ்பாவ நீதவான் நீதிமன்ற நீதவான் ருவந்திகா மாரசிங்க, நேற்று (24) உத்தரவிட்டார்.

பிலியந்தலை, மாவித்தரை, கம்மானவத்தை வீதியைச் சேர்ந்த 52 வயதான தந்தை 46 வயதான தாய் 25, 21 வயதான மகன்மார் இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாவித்தரை, கெஸ்பேவ பிரதேசத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து அமைச்சரின் சாரதியை அடித்துக்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

பலகை வீட்டில் தீப்பிழம்பை கக்கிய காதல்

நேற்று (24) காலை 7 மணியளவில் குறித்த வீட்டுக்கு வருகை தந்த இளைஞன், வீட்டுக்குள் எவருக்கும் செல்ல முடியாத வகையில் கதவுகளை பூட்டி, தீயை வைத்துள்ளமை தெரியவந்துள்ளது.

அத்துடன் குறித்த இளைஞன் ஏதோ ஒருவகையான திரவத்தை வீட்டுக்குள் தெளித்துள்ளதாக வைத்தியசாலையில் தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ள யுவதியின் தாய் வாக்குமூலமளித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இச்சம்பவத்தில் குறித்த இளைஞன், 30 வயதான ஈஸ்வரன் மேனகா என்ற யுவதி, யுவதியின் தந்தையான 71 வயதான ஈஸ்வரன் தேவன் ஆகியோர் உயிரிழந்துள்ளதுடன், 65 வயதான தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான இளைஞர் கண்டியிலுள்ள நகைக்கடையொன்றில் தொழில் புரிந்து வருவதுடன், அவர் திருட்டு சம்பவம் ஒன்று தொடர்பில் 6 மாதங்களுக்கு முன்னர், சிறைத் தண்டனை அனுபவித்தவர் என்றும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

முழுமையாக பலகைகளால் ஆன குறித்த வீடு, தீயால் முற்றாக எரிந்துள்ள நிலையில், அங்கிருந்த தகரப் பெட்டியொன்றில் 50 இலட்சத்துக்கும் அதிகமான பணம் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட அயல்வாசியொருவர் இவ்வாறு தெரிவித்தார்.

“காலை 7 மணியளவில் அந்த வீட்டில் தீ ஏற்பட்டது. அப்போது ராணி அம்மா கூக்குரலிடும் சத்தம் கேட்டது. கதவு உட்புறமாக மூடப்பட்டிருந்தமையால் கதவை உடைத்து ராணி அம்மாவை காப்பாற்றினோம். அப்போது அவரது உடல் தீயால் எரிந்து கொண்டிருந்ததுடன், ‘மகளை காப்பாற்றுங்கள், மகளைக் காப்பாற்றுங்கள் உள்ளே அவள் இருக்கிறாள்’ என்று கூறினார். எனினும் எம்மால் உள்ளே செல்ல முடியவில்லை. அத்துடன் அங்கிருந்த சமையல் எரிவாயு சிலிண்டர்களும் எரியத் தொடங்கின. இதனால் அந்த வீட்டுக்குள் தீ அதிகமாகப் பற்ற ஆரம்பித்தது” என்றார்.

“ வீட்டில் தீபற்றிய போது ராணி அம்மா மாத்திரமே கூக்குரலிட்டார். அவரைத் தவிர வேறு எவரும் சத்தமிட்டவில்லை. எனவே தந்தையையும் மகளையும் மயக்கமடையச் செய்த பின்னரே, தீயை மூட்டியிருக்கலாம் என நாம் சந்தேகிக்கின்றோம்” என்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரசிக சம்பத் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

விடிவு காலம்

இது தொடர்பில் மத்திய அரசைத் தொடர்பு கொண்டு இவ்விடயத்தை எவ்வாறு கையாள்வது என, சட்டரீதியாக கேட்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

விரைவில் இதற்கு விடிவு காலத்தை தமிழக அரசு ஏற்படுத்தித் தரும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து 16 பேர், தமிழகத்துக்கு தஞ்சம் கோரிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“ஆப்பு வைப்பேன்”

அதன் பின்னர் ஊடகங்களிடம் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தில் உள்ள எந்தவொரு தனிநபரையும் மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு தாம் செயற்படப்போவதில்லை. ராஜபக்ஷ குடும்பத்தில் எவரையும் பதவிக்கு கொண்டு வருவதற்காக பிரசாரம் செய்யப்போவதில்லை.

சர்வகட்சி மாநாடானது கட்சிகள் ஒன்றிணைந்து நடைமுறைகளை விவாதிக்கும் நோக்கத்துடன் அழைக்கப்பட்டதாகவும் இருப்பினும் நிதியமைச்சர் மாநாட்டில் முரண்பட முயன்றார் என்றும் குறிப்பிட்ட அவர், இவ்வாறான நபர்களை கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது எனத் தெரிவித்தார்.

“நான் ஒரு தேசபக்தர் என்பதால், அரசியலில் ஈடுபடுகிறேன். அமைச்சுப் பதவிகளைப் பெறும் நோக்கில் அல்ல”

என்றும் தெரிவித்த அவர், நாட்டை காலனித்துவப்படுத்தவோ அல்லது அரச வளங்களை வெளிநாடுகளுக்கு விற்கவோ அனுமதிக்க முடியாது என்பதாலேயே 11 கட்சிகளும் தற்போதைய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன என்றார்.

IMF இன் ஆசிய பசுபிக் பணிப்பாளர் ஓய்வு

கொரிய மத்திய வங்கியின் ஆளுநர் வேட்பாளராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏப்ரல் முதல் றீ ஓய்வுபெறுவார் என்று நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா, நேற்று (24) அறிவித்தார்.

கடந்த வாரம் இலங்கைக்கு வந்திருந்த சாங்யோங் றீ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவுடனான கலந்துரையாடலின் போது சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிப் பணிப்பாளர்மற்றும் இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு சர்வதேச நிதி நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்தின் உயர் அதிகாரிகளை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரயில் கட்டணங்கள் ரகசியமாக அதிகரிப்பு

அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், சாதாரண பயணக் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை எனவும் கட்டண திருத்தங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கான முதலாம் வகுப்புக்கான கட்டணம் 1,400 ரூபாயிலிருந்து 1,700 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ரயில்களுக்கான பயணச் சீட்டு விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன, நேற்று (24) தெரிவித்தார்.

சில ரயில்களில் கட்டணங்கள் 60 சதவீதத்தாலும் சில ரயில்களின் கட்டணம் 50 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டு உள்ளதாகவும் பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யும் ரயில் நிலையங்களுக்கு மாத்திரம் நேற்று (24) அதிகாலை 1.00 மணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என சோமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

ரயில்வே திணைக்களத்தின் மரபுப்படி மாதத்தின் முதலாம் திகதி கட்டண உயர்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும், வரலாற்றில் முதன்முறையாக, தற்போதைய ரயில்வே பொது முகாமையாளர்

“ பொது மக்களுக்கு காலை 10.00 மணிக்கு பயணச்சீட்டு முன்பதிவு செய்ய இணையதளம் திறக்கப்பட்டாலும், சில அதிகாரிகளின் தேவைக்கு இணங்க அதிகாலை 5.00 மணிக்கு பயணச்சீட்டு வழங்கப்படுவதாகவும், அதனால் முன்பதிவு ஆசனங்களில் கடும் சிக்கல் நிலவுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்

எவ்வித நடைமுறையும் இன்றி, நிலைய அதிபர்களுக்கு தெரிவிக்காமல் கட்டணத்தை உயர்த்தியுள்ளார் என்று தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக இந்த நேரத்தில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவது பொருத்தமானதல்ல எனத் தெரிவித்த அவர், சாதாரண மற்றும் பருவப் பயணச் சீட்டுக் கட்டணங்களும் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாகத் கூறியுள்ளார்.

மேலும், பொது மக்களுக்கு காலை 10.00 மணிக்கு பயணச்சீட்டு முன்பதிவு செய்ய இணையதளம் திறக்கப்பட்டாலும், சில அதிகாரிகளின் தேவைக்கு இணங்க அதிகாலை 5.00 மணிக்கு பயணச்சீட்டு வழங்கப்படுவதாகவும், அதனால் முன்பதிவு ஆசனங்களில் கடும் சிக்கல் நிலவுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் வங்கிமுறை ஸ்திரமாக உள்ளது

இதனையடுத்து, இலங்கை மத்திய வங்கி நேற்று (24) பிற்பகல் 3 மணியளவில் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கோரிய ஹர்ஷ எம். பி, ரூபாய் மதிப்பு சரிவு அரச வங்கிகளை கடுமையாக பாதிக்கும் என்றும் இது வங்கி முறையின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

10 நாள்களுக்குள் இலட்சம் சிலிண்டர்கள்

மேலும் இரண்டு எரிவாயுக் கப்பல்களில் ஒன்று இன்றும் (25) மற்றொரு கப்பல் திங்கட்கிழமையும் (28) நாட்டை வந்தடையவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

“ நாட்டின் நாளாந்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பொதுவாக, 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரையிலான எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க வேண்டிய தேவை உள்ளது

புதன்கிழமை (23) நாட்டை வந்தடைந்த கப்பலிலிருந்து எரிவாயுவை இறக்கும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளதாகவும் குறித்த எரிவாயு கையிருப்பை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி, சந்தையில் தற்போது நிலவும் எரிவாயு தட்டுப்பாடு நீங்கி, எரிவாயு கொள்வனவுக்கான நீண்ட வரிசை இல்லாமல் செய்யப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நாட்டின் நாளாந்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பொதுவாக, 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரையிலான எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க வேண்டிய தேவை உள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

எரிவாயு தட்டுப்பாட்டால் தொடர்ந்து எரிவாயு விநியோகத்தை மேற்கொள்ள முடியாமல் போனமையால் சந்தையில் பெரும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், இதனால் பொதுமக்களின் பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது என தெஷார கூறினார்.

இதேவேளை, எரிவாயுவுக்கான நெருக்கடி நிலையை முடிவுக்கு கொண்டு வர இன்னும் ஒரு வாரம் செல்லும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியை இன்று சந்திக்கிறது த.தே.கூ

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு, மூன்றாவது முறையாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இரண்டு முறை ஜனாதிபதியுடனான சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை (15) பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவிருந்த சந்திப்பும் மூன்றாவது முறையாக இன்றைய தினத்துக்கு (25) ஒத்திவைக்கப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சி அன்றையதினம் நடத்திய ஆர்ப்பாட்டம் காரணமாகவே இந்தக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தால் பிற்போடப்பட்டதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதியுடன் இன்று (25) இடம்பெறவுள்ள சந்திப்பின் போது,

“ தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கான இணக்கம் ஏற்படும் பட்சத்தில், புலம் பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு எதிர்ப்பார்த்துள்ளனர் என அறியமுடிகிறது

தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு குறித்தே அவதானம் செலுத்தப்படும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பில், செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான தமிழீழ விடுதலைக் கழகம் (டெலோ) தவிர்ந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகள் கலந்துகொள்ளவுள்ளன.

அவ்வாறு, தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கான இணக்கம் ஏற்படும் பட்சத்தில், புலம் பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு எதிர்ப்பார்த்துள்ளனர் என அறியமுடிகிறது.

மஹிந்தவின் பதாகை பெறுமதி தமிழர் உயிர்களுக்கு இல்லை

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் யாழ். விஜயத்தின் போது, பிரதமரை வரவேற்பதற்கான பதாகைகளை ஆட்களைத் திரட்டி வந்து எரித்தார்கள் என கிடைக்கப்பெற்ற முறைப்பாடு அமைய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டோம்.

நானும், சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செல்வரட்ணம் மயுரன் ஆகியோரிடமும் இன்று (நேற்று) பொலிஸ் வாக்கு மூலம் பெறப்பட்டது.

“வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்களுக்கு நீதி வேண்டி ஜனநாயக வழியில் குறித்த பகுதியில் போராடினோம் என்றும் யாரால் எரிக்கப்பட்டது என்பது தெரியாது எனவும் போராட்டம் ஜனநாயக வழியிலேயே இடம்பெற்றது என்பதையும் ஜனநாயக உரிமைகள்

“ ஜனநாயக வழியிலேயே போராட்டம் இடம்பெற்றது. ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட முடியாதவை. தமிழர் உயிர்களைக் காட்டிலும் பதாகைகளுக்கு இலங்கையில் பாதுகாப்புள்ளது. தாய்மார் தாக்கப்பட்டது கணக்கில் எடுக்கப்படவில்லை. இவையெல்லாம் அரச அதிகாரத்தின் உச்சக்கட்டம்

மறுக்கப்பட முடியாதது என்பதையும் வலியுறுத்தியுள்ளோம்” என்றார்.

“தமிழர் உயிர்களைக் காட்டிலும் பதாகைகளுக்கு இலங்கையில் பாதுகாப்புள்ளது. தாய்மார் தாக்கப்பட்டது கணக்கில் எடுக்கப்படவில்லை. இவையெல்லாம் அரச அதிகாரத்தின் உச்சக்கட்டம் என்றார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு விளக்கமறியல்

கொலை செய்த பிரதான சந்தேகநபர், செவ்வாய்க்கிழமை (22) கைது செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர், பிரதான சந்தேகநபரின் தந்தை மற்றும் சகோதரர் ஆகியோர் சரணடைந்ததையடுத்து கைதுசெய்யப்பட்டதாக கல்கிசை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் கமகே நிலந்த தெரிவித்தார்.

கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டு களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அவரது தாயாரும் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில்

“ கவனக்குறைவாக வாகனம் ஓட்டியதால் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறில் 41 வயதுடைய சாரதி, தனிநபர்கள் குழுவினால் கட்டைகளாலும் கூரிய பொருட்களாலும் அடித்துக் கொல்லப்பட்டார்

நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கவனக்குறைவாக வாகனம் ஓட்டியதால் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறில் 41 வயதுடைய சாரதி, திங்கட்கிழமை (21) மாலை தனிநபர்கள் குழுவினால் கட்டைகளாலும் கூரிய பொருட்களாலும் அடித்துக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

தெரிவுக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதியுடன் பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவிற்கான பதவிக்காலம் நிறைவடையவிருந்தது.

எவ்வாறாயினும், தெரிவுக்குழுவின் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்பட்டுள்ளதால், பதவிக்காலத்தை நீடிக்க தீர்மானித்ததாக சபாநாயகர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

விற்பனைக்கு

கொள்ளுப்பிட்டி அமெரிக்கன் காரியாலயத்துக்கு முன்பாக 25/3 பள்ளிய ஒழுங்கையில் வீடொன்று விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 0710292018, 0776955044

சுற்றுலாத் துறையை

வீழ்ச்சியடையச் செய்ய பிரசாரம் முன்னெடுப்பு

பாதுகாப்பில் தீவிர கவனம் வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

சுற்றுலாத்துறையை வீழ்ச்சியடையச் செய்வதற்கு பல்வேறு வகையான திட்டமிட்ட பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய பின்னணியிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாகவே உள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

இல 80, காலி வீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையை நேற்று (24) முற்பகல் பார்வையிட்டபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இலங்கையை சுற்றுலாப் பயணிகளின் ஆசியப் பயண இலக்காக மாற்ற முடியும். இதற்கான தடைகளை நீக்கி, உலகளாவிய ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் திட்டங்களை வகுக்க வேண்டுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆண்டின் முதல் காலாண்டில் 260,000 க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். இது கடந்த ஆண்டு சுற்றுலா பயணிகளின் வருகையை விட அதிகமாகும். இந்த ஆண்டு இறுதிக்குள் 1.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலக்கை அடைய அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இதற்கு சுற்றுலாத்துறையின் சகல பிரிவுகளும் தயாராக வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகள் உள்ளன. அதற்கேற்ப பயிற்சிகளை விரிவுபடுத்த வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடு முழுவதும் வியாபித்துள்ள ஹோட்டல் கட்டமைப்பின் உதவியுடன் இளைஞர்களுக்கு நடைமுறை ரீதியிலான பயிற்சி மற்றும் கோட்பாட்டு அறிவையும் வழங்கத் திட்டமிடுவதன் மூலம் பாரியளவிலான தொழில் வாய்ப்புகளை உருவாக்க முடியும்.

சுற்றுலாத்துறையை வீழ்ச்சியடையச் செய்வதற்கு பல்வேறு வகையான திட்டமிட்ட பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய பின்னணியிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாகவே உள்ளது என்றார்.

வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இந்நாட்டில் கால் வைத்தது முதல் மீண்டும் திரும்பிச் செல்லும் வரை உயர்தர விருந்தோம்பலுடன் கவர்ச்சிகரமான சேவையை வழங்குவது சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாகும். விமான நிறுவனங்களுடன் கலந்துரையாடி இலங்கைக்கான விமானப் பயண எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்திய மீனவர்கள்

12 பேருக்கும் விளக்கமறியல்

■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி, இரணைதீவு கடல் பகுதியில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க ஒரு விசைப்படகில் வந்து, இரணைதீவு கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களை நேற்று (24) அதிகாலை எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், அப்படகில் இருந்த 12 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். விசாரணையின் பின்னர், அவர்கள் அனைவரும், கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்று மாலை 4.30 மணியவில், ஆஜர்படுத்தப்பட்டனர்.

அந்த 12 பேரையும் எதிர்வரும் 07ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கொள்ளையடித்த இருவர் சிக்கினர்

நாவல பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 18ஆம் திகதியன்று பணத்தை கொள்ளையடித்தமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 27, 29 வயதான இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய கைது செய்யப்பட்ட இவ்விருவரும் கொழும்பு 08, பொரளை ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாவர். அன்றிரவு ஓட்டோவில் சென்ற ஐவர் அங்கிருந்த ஊழியரை அச்சுறுத்தி பணத்தை கொள்ளையடித்துச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குஷ் சிக்கியது

எட்டுப் பொதிகளில் அனுப்பப்பட்டிருந்த குஷ் போதைப்பொருளும் போதைவில்லைகளும் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வற்றின் உள்ளூர் பெறுமதி 32 மில்லியன் ரூபாயென மதிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பு, கம்பஹா, கண்டி ஆகிய பகுதிகளில் உள்ள முகவரிகளுக்கு பிரித்தானியா, கனடா, ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து குறித்த பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த முகவரிகள் போலியானவை என விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தை

ஐந்து சதத்துக்கும் பசில் கண்டுகொள்வதில்லை

■ பா. நிரோஸ்

பாராளுமன்றத்தை பசில் ராஜபக்ஷ ஐந்து சதத்துக்குக்கூட கண்டுக்கொள்வதில்லை என தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், நாட்டு மக்களை வரிசைகளில் நிறுத்தி அரசாங்கம் பலிவாங்குவதாகவும் தெரிவித்தார்.

பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று (24) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசாங்கம் நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வை வழங்குவதாகத் தெரியவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை வழங்க வேண்டுமென நாம் பல தடவைகள் கோரியும், இதுவரையில் அது வழங்கப்படவில்லை. நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறுவதில்லை.

இதுவொரு பாரதூரமான விடயம். நாட்டு மக்கள் இதனை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. எனவே, பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்கு வருகை தந்து, பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும். சர்வதேச நாணய

நிதியத்திடம் ஒருபோதும் செல்லப்போவதில்லை எனக் கூறிவந்த மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளைப் பின்பற்றி வருகிறார் எனவும் தெரிவித்தார்.

காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 4,200 ரூபாயாக அதிகரித்துள்ளது. பால்மா, காஸ், எரிபொருளுக்காக நாட்டு மக்களை வரிசையில் நிறுத்தி, நாட்டு மக்களை அரசாங்கம் பலிவாங்கி வருகிறது. எவ்வாறாயினும் ஊழல், கொள்ளையடித்தல் போன்ற செயற்பாடுகளை அரசாங்கம் நிறுத்தவில்லை.

உலக நாடுகளும் இதேபோன்ற நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருவதாகக் கூறுகிறார்கள். உலகின் எந்த நாட்டில் மக்கள் அத்தியாவசிய பொருள்களுக்காக வரிசையில் நிற்கிறார்கள் எனவும் கேள்வி எழுப்பினார்.

நிவாரண பட்ஜட் ஏமாற்று வேலையா?

பணம் எங்கிருக்கிறது என உதயா கேள்வி

■ பா. நிரோஸ்

முன்னொருபோதும் இல்லாதவகையில் இலங்கை பாரிய நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுத்து வருவதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார், நிதி அமைச்சரின் நிவாரண பட்ஜட் ஓர் ஏமாற்று வேலையா? அவற்றைக் கொடுக்க நிதி எங்கே இருக்கிறது எனவும் கேள்வி எழுப்பினார்.

பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று (24) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசைகளில் நின்று உயிரிழந்தவர்களுக்கு, சபையில் அஞ்சலி செலுத்தி உரையாற்றிய உதயகுமார் எம்.பி, 1953ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுபோன்ற நிலை, நாட்டில் ஏற்பட்டதில்லை.

மேலும், தென்னாசியாவில் இதுபோல எந்தவொரு நாடும் நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுத்ததில்லை. காலங்கடந்தாவது சர்வதேச நாணய நிதியத்துக்கு அரசாங்கம் சென்றுள்ளதென நினைத்தால், மீண்டும் வேதாளம் மரத்தில் ஏறியுள்ளது என்றார்.

பணத்தை அச்சிடுவது, சீனாவிடமிருந்து கடனைப் பெற்றுக்கொள்வது போன்ற தவறுகளை அரசாங்கம் இன்னும் திருத்திக்கொள்ளவில்லை என்றார்.

பேருவலை மாநகர சபை

விலைமனு கோரல் விளம்பரம் – கட்டுமானம்

கீழே அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமான வேலைகளுக்காக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் மற்றும் பிரதிநிதித்துவப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து சீல் வைக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு கோரல் விண்ணப்பங்கள் **2022.04.01** ஆம் திகதி முதல் **2022.04.25** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **மு.ப 9.00** மணி முதல் **பி.ப 3.00** மணி வரை பேருவலை மாநகர சபை அலுவலகம் மூலம் விநியோகிப்பதுடன் **2022.04.26** ஆம் திகதி **மு.ப 10.00** மணியுடன் விலைமனு கோரல் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்வது நிறைவுறும். அதற்கு பின்னரான கிடைக்கப்பெறும் விலைமனு கோரல் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அதே நாள் **மு.ப 10.05** மணிக்கு பேருவலை மாநகர சபை அலுவலகத்தில் விலைமனு கோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் விலைமனு சீல் வைக்கப்பட்டு கடிதவுரைக்குள் இட்டு, கடிதவுரையின் இடது பக்க மேல் மூலையில் அந்த விடயத்திற்கான பெயரை குறிப்பிட்டுதல் வேண்டும். சகல விலைமனுக்களும் தலைவர், பேருவலை மாநகர சபையின் செயலாளரின் காரியாலத்தில் இருக்கும் விலைமனு கோரல் பெட்டியில் இடவும். விலைமனு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதியல் குறிப்பிட்ட நேரத்திற்கு அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். விலைமனு விண்ணப்பங்களை முழுமையாகவோ அல்லது பகுதிகளாகவோ ஏற்றுக்கொள்வதற்கு இல்லது நிராகரிப்பதற்கு முழு உரிமையும் விலைமனு கோரல் சபையினருக்கு உண்டு.

குறிப்பு:

01. முழு விபரங்களுடன் விலைமனு விண்ணப்ப விவரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.
02. சகல விலைமனு விண்ணப்பங்களுடன் கீழ் குறிப்பிடப்பட்டவாறு விண்ணப்பிக்கும் விலைமனுக்கான விலைமனு காப்பீடு இதனுடன் இணைக்கப்படல் வேண்டும்.
03. இது சம்பந்தமாக தயாரிக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்ப படிவத்தின் மூலம் மாத்திரமே விலைமனுக்களை விண்ணப்பிக்களாம்.
04. விலைமனு விண்ணப்பங்கள் இரண்டு நகல்களுடன் சமர்பிக்கப்படல் வேண்டும்
05. மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்படள்ள இலக்கத்துடன் திருமதி. குசும் என்பவருடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்: **034 – 2276375 034 – 2277850**

வகை இலக்கம்	விடயம்	தகுதி	மீள் வழங்கப்படாத விலைமனு விண்ணப்ப கட்டணம் (ரூபா)	மீள் வழங்கப்படும் விலைமனு காப்பீடு (ரூபா)
01	பேருவலை நகர சபைக்கு சொந்தமான ஆயுர்வேத கட்டிடத்தை நிர்மானித்தல். 2 வது கட்டம்	ICTAD C07 அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர்கள்	ரூபா. 5,000.00	ரூபா. 64,800.00

2022.03.17 ஆம் திகதி
பேருவலை நகர சபை அலுவலகம

அல்ஹாஜ். எம். மசாஹிம் மொஹம்மட்
நகர ஆணையாளர்
பேருவலை நகர சபை

பசளை உற்பத்தியை அதிகரித்து

விவசாயிகளுக்கு உதவ தீர்மானம்

■ அஸ்லம் எஸ். மௌலானா

உரக் கட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு, சேதனப் பசளை உற்பத்தியை அதிகரித்து, விவசாயத்துறைக்கு பங்களிப்புச் செய்வதற்கான விசேட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதென கல்முனை மாநகர சபை தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர சபையின் 48ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு, மேயர் ஏ.எம். றகீப் தலைமையில், நேற்று முன்தினம் (23) பிற்பகல் நடைபெற்றபோதே இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டு, இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை முன்மொழிந்து கருத்து தெரிவித்த மாநகர சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் சி.எம். முபீத், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உரக்கட்டுப்பாட்டு திட்டத்தால் விவசாயத்துறை பாதிக்கப்பட்டுள்ளதாக விசனம் தெரிவித்தார்.

அத்துடன் 40 ஆயிரம் ரூபாய்க்கு கூட உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதால், எமது மாநகர சபையால் சேகரிக்கப்படுகின்ற உக்கக்கூடிய கழிவுகளைக் கொண்டு, பசளைகளை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு நல்ல விலையில் விற்று, உதவ வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்.

இதனை ஆமோதித்து கருத்து வெளியிட்ட சாய்ந்தமருது சுயேட்சைக்குழு உறுப்பினர் அப்துல் அஸீஸ், உரத் தட்டுப்பாடு நிலவி வருகின்ற இன்றைய சூழ்நிலையில் இயற்கை சேதனப் பசளைக்கு நல்ல கிராக்கி இருப்பதாகவும் அவற்றை மிகையாக உற்பத்தி செய்து எமது பகுதியிலேயே சந்தைக்கு விடுவோமாயின், விவசாயிகள் தாமே முன்வந்து, கொள்வனவு செய்வார்கள் என்றார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

எரிபொருள் பதுக்கல்

இராணுவ பிரசன்னத்துடன் முறியடிப்பு

■ செ. கீதாஞ்சன், எஸ். தில்லைநாதன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் எரிபொருளின் பதுக்கல் நிலையை கட்டுப்படுத்த பொலிஸாரும் இராணவத்தினரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பிரசன்னமாகி உள்ளார்கள்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில், எரிபொருள் நிலையங்களுக்கு கிடைக்கும் எரிபொருட்களை ஒரு சிலர் பல தடவைகள் பெற்று, பதுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி, மாங்குளம், ஒட்டுசுட்டான், முள்ளியவளை, முல்லைத்தீவு, நாயாறு, புதுக்குடியிருப்பு, விசுவமடு பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன. இவை பலவற்றில், பெற்றோல் உள்ளபோதும் டீசல், மண்ணெண்ணைய் இல்லாத நிலை காணப்படுகின்றது.

துணுக்காய் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் மல்லாவி எரிபொருள் நிரப்பு நிலையத்தில், இராணுவப் பிரசன்னத்துடனேயே எரிபொருள் விநியோகம் இடம்பெற்று வருகிறது.

நேற்று (24) அதிகாலை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குக் கிடைக்கப்பெற்ற 6,600 லீற்றர் டீசல், ஒவ்வொரு வாகனங்களுக்கும் தலா 5,000 ரூபாய் வீதமே வழங்கப்பட்டது. அதேவேளை, மண்ணெண்ணை விநியோகமும் ஒரு குடும்ப அட்டைக்கு தலா 500 ரூபாய் வீதமே வழங்கப்படுகிறது.

அதேவேளை, இராணுவத்தினரால் வாகன இலக்கத் தகடுகள் பதியப்பட்ட பின்னரே எரிபொருள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

■ வா. கிருஸ்ணா

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திராய்மடு, ஐந்தாம் குறுக்கு வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் (23) மாலை மின்சாரம் தாக்கி, கோகிநாதன் நிதுர்ஷன் எனும் 22 வயது இளைஞன் உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு கதவு ஒன்றைப் பொருத்துவதற்கான பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, மின்சாரத்தில் பொருத்தப்பட்டிருந்த துளையிடும் கருவியின் வயர் கதவில் இணைக்கப்பட்டிருந்த தகரத்தில் பட்டிருந்த நிலையில் குறித்த தகரத்தில் துளையிடும் கருவியால் துளையிட முயற்சித்தபோது இளைஞனை மின்சாரம் தாக்கியுள்ளது.

உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இளைஞனைக் கொண்டுசென்றபோதிலும் சிகிச்சை பலனின்றி அங்கு அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞனின் சடலம், பிரேத பரிசோதனைக்கான வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்த இளைஞன் கடந்தாண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று, பொறியியல் துறைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.



திறப்பு விழா காணும்

கிழக்கின் புற்றரை மைதானம்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

கிழக்கு மாகாண கிரிக்கெட் வீரர்களுக்கு மகிழ்ச்சி தரும் விடயமாக, அம்மாகாணத்தின் முதல் புற்றரை (Turf) கிரிக்கெட் அரங்கு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி மட்டக்களப்பில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த மைதானம், புலம்பெயர்ந்து வாழும் கோட்டைமுனை விளையாட்டுக் கழக அங்கத்துவர்களின் நிதி உதவியோடு, மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சத்துருக்கொண்டானில், கோட்டைமுனை விளையாட்டுக் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

2017ஆம் ஆண்டு இலங்கையின் முதல் டெஸ்ட் அணித்தலைவர் பந்துல வர்ணபுரவின் ஆளுகையில் இந்த மைதானத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பம் செய்யப்பட்டிருந்திருந்தன.

மைதானம் முன்னரே கட்டி முடிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் கொவிட்-19 வைரஸ் தொற்று அடங்கலாக நாட்டின் சில அசாதாரண சூழ்நிலைகள் அதனை பிற்போட்டிருந்தன.

தற்போது பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மைதானத்தில் 30 கிரிக்கெட் வீரர்கள் ஒரே நேரத்தில் தங்கி பயிற்சிகளை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் செய்யப்பட்டிருப்பதோடு, மைதானத்தின் நடுவே ஐந்து புற்றரை களங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அதேநேரம் வீரர்களின் பயிற்சிக்காக ஆறு வலைப்பயிற்சி மையங்களும் உருவாக்கப்பட்டிருப்பதோடு, அதிநவீன இலத்திரனியல் ஸ்கோர் பலகை, நகர்த்தக்கூடிய கறுப்பு வெள்ளை பார்வைத்திரை என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன.

பன்றிக்கு வைக்கப்பட்ட

மின்சாரத்தில் சிக்கி குடும்பஸ்தர் பலி

■ ஆர். ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோமத்லாவெளி கிராம சேவகர் பிரிவில் பன்றிக்கு வைக்கப்பட்டிருந்த மின்சாரத்தில் சிக்குண்டு குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

கோமத்தலாவெளி கிராமத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான சந்திரசேகரன் யோகேஸ்வரன் (வயது 32) என்பவரே, நேற்று (24) இவ்வாறு உயிரிழந்துள்ளார் என வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர், வத்தவப் பழப் பயிர் செய்கையில் ஈடுபட்டு வருபவர். தன்னுடைய தோட்டத்துக்கு மின்சார சபையில் முறையாக

மின்சாரம் பெற்றிருந்த நிலையில், தோட்டத்துக்குள் பன்றி மற்றும் காட்டு மிருகங்கள் வருவதால் அவற்றில் இருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காக முறையற்ற விதத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்தியுள்ளார் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முறையற்ற விதத்தில் மின்சாரத்துடன் கம்பி இணைக்கப்பட்டதால் மின்சாரம் தாக்கி, இவ் உயிரிழப்பு இடம்பெற்றுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர் விலை அதிகரிப்பால்

வெறிச்சோடிய நகைக் கடைகள்

■ ரொசேரியன் லெம்பர்ட்

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் பண வீக்க அதிகரிப்பின் காரணமாக, மன்னார் மாவட்டத்தில் நடுத்தர மற்றும் சிறு நகைக் கடை உரிமையாளர்கள் உள்ளடங்கலாக நகைத் தொழிலகங்களில் பணிபுரியும் ஊழியர்களும் விற்பனை இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

விலைவாசி அதிகரிப்பு, பொருட்களுக்கான தட்டுப்பாடு, மக்கள் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாகவும் தங்கத்தின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றமையால் நகை கொள்வனவுகள் பாரிய அளவில் குறைவடைந்துள்ளதாகவும் மன்னார் நகைக்கடை உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் கவலை தெரிவித்தனர்.

இதனால் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல், நகை விற்பனை நிலையங்களுக்கான மின் கட்டணம் , நீர் கட்டணம், வாடகைப் பணம் செலுத்துவதில் பாரிய சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் நகை விற்பனை நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

மின்வெட்டை சாதகமாக்கி

கல்லூரியில் திருட்டு

■ எம். றொசாந்த், செந்துரன் பிரதீபன், வி. நிதர்ஷன்

மின்வெட்டு வேளை அச்சுவேலி மத்திய கல்லூரி அலுவலகம் உடைக்கப்பட்டு, அங்கிருத்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான மடிக்கணினி திருடப்பட்டுள்ளது.

அச்சுவேலி பகுதியில் நேற்று முன்தினம் (23) மின் வெட்டு நடைமுறையில் இருந்த வேளை, பாடசாலை சூழலில் பொருத்தப்பட்டு இருந்த சி.சி.டி.வி கமெராக்கள் செயற்படாது இருந்தமையை பயன்படுத்தி, இந்தத் திருட்டுச் சம்பவம் இடப்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், மோப்ப நாயின் உதவியுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, பாடசாலைக்கு அருகில் பொலிஸ், இராணுவம் இணைந்த காவலரண் ஒன்றும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துமீறிய மீன்பிடி:

இந்திய மீனவர்கள் 16 பேர் கைது

■ வி. நிதர்ஷன், டி. விஜித்தா, செந்துரன் பிரதீபன்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 இந்திய மீனவர்கள் இரண்டு பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக்கு அருகே நேற்று (24) இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர், ஒரு படகையும் அதிலிருந்த 4 மீனவர்களையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட மீனவர்களை, மயிலிட்டி துறைமுகம் அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இதேபோல, இரணைத்தீவு அருகே அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், முழங்காவில் கடற்படை முகாமுக்கு அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பளையில்

மின்னல் தாக்கம்

■ எஸ். தில்லைநாதன்

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேராலை பகுதி வீடொன்றை, நேற்று முன்தினம் (23) மாலை மின்னல் தாக்கியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்து கொண்டிருந்த வேளை, வீட்டில் இருந்த அனைவரும் வீட்டின் முன் ஹோலில் இருந்துள்ளனர்.

இதன்போது பாரிய சத்தத்துடன் மின்னல் வீட்டின் கூரைப் பகுதியைத் தாக்கியுள்ளது. இதனையடுத்து மின் குமிழ்கள் வெடித்துச் சிதறின. மின்விசிறியும் தரையில் விழுந்துள்ளது. மேலும், மின்சாரமும் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் தெய்வாதீனமாக வீட்டில் இருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

wijeyanewspapers

2019/2020க்கான பத்திரிகை விருதுகளில்

சிறந்து விளங்கும் விஜய நியூஸ் பேப்பர்ஸ்

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுக்கான சிறந்த ஊடகவியலாளருக்கான பத்திரிகை விருதுகள் (21 மற்றும் 22 ஆவது) கொழும்பு ஹில்டன் புளூவில் 2022 மார்ச் 22 ஆம் திகதி செவ்வாய்கிழமை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டின் வெற்றியாளர்கள், வெளியீடுகள் பின்வருமாறு:

2019 ஆம் ஆண்டின் சிறந்த பத்திரிக்கை வடிவமைப்பு – 'தமிழ் மிரர்' வடிவமைப்பு குழு (விருது)

2019 ஆம் ஆண்டின் சிறந்த கேலிச்சித்திர கலைஞர் (தமிழ் மொழி) – தமிழ் மிரரின் நாமல் அமரசிங்க (விருது)

2020 ஆம் ஆண்டுக்கான வணிக ஊடகவியலாளர் (தமிழ்) – தமிழ் மிரரின் எஸ். சந்திரசேகர் (விருது).

2020 ஆம் ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்பு – 'தி சண்டே டைம்ஸ்' வடிவமைப்பு குழு (தகுதிச் சான்றிதழ்)

2019 ஆம் ஆண்டின் கேலிச்சித்திர கலைஞர் (ஆங்கிலம்) – டெய்லி மிரரின் டி.எம்.டி. சஜித் பண்டார ஏக்கநாயக்க (விருது)

2020 ஆம் ஆண்டின் சிறந்த கேலிச்சித்திர கலைஞர் (சிங்களம்) – தேஷயவின் ஏ.ஐ. வீரசேகர (விருது)

2020 ஆம் ஆண்டின் சிறந்த கேலிச்சித்திர கலைஞர் (ஆங்கிலம்) – டெய்லி எ.ப்டியின் வசந்த காந்திலால் சிறிவர்தன (விருது

2019 ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு ஊடகவியலாளர் (ஆங்கிலம் –) டெய்லி மிரரின் ஹர்ஷ அமரசிங்க (விருது)

2019 ஆம் ஆண்டின் சிறந்த சுகாதார பராமரிப்பு மற்றும் மருத்துவ கட்டுரை (சிங்களம்) – ஞாயிறு லங்காதீபவின் பத்மினி மாதரகே (தகுதிச் சான்றிதழ்)

2019 ஆம் ஆண்டின் சிறந்த சுற்றாடல் கட்டுரை (சிங்களம்) – தேசயவின் குசும்சிறி விஜயவர்தன (தகுதிச் சான்றிதழ்)

2019 ஆம் ஆண்டுக்கான சிறந்த சுற்றுச்சூழல் கட்டுரை (ஆங்கிலம்) – டெய்லி மிரரின் கமந்தி விக்கிரமசிங்க (விருது)

2020 ஆம் ஆண்டின் சிறந்த சுற்றுச்சூழல் கட்டுரை (ஆங்கிலம்) – தி சண்டே டைம்ஸின் கசுன் வரகாபிட்டி – (தகுதிச் சான்றிதழ்)

2020 ஆம் ஆண்டின் சிறந்த சுற்றுச்சூழல் கட்டுரை (ஆங்கிலம்) – டெய்லி மிரரின் கமந்தி விக்கிரமசிங்க (விருது)

2020 ஆம் ஆண்டின் பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்தன (சிங்களம்) – அத பத்திரிகையின் திலின சுரத் டி மெல் (தகுதிச் சான்றிதழ்)

2020 ஆம் ஆண்டின் பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்தன (சிங்களம்) – தேஷயவின் கபில குமார காலிங்க (விருது)

2019 ஆம் ஆண்டின் சிறப்பு கட்டுரையாளருக்கான உபாலி விஜேவர்தன (ஆங்கிலம்) – தி சண்டே டைம்ஸின் யோமல் சொனரத் யாப்பா (தகுதிச் சான்றிதழ்)

2020 ஆம் ஆண்டின் சிறப்பு கட்டுரையாளருக்கான உபாலி விஜேவர்தன (சிங்களம்) – ஞாயிறு லங்காதீபவின் டபிள்யூ. எஸ்.டி. விஜேவீர (தகுதிச் சான்றிதழ்)

2020 ஆம் ஆண்டின் சிறப்பு கட்டுரையாளருக்கான உபாலி விஜேவர்தன (ஆங்கிலம்) – தி சண்டே டைம்ஸின் சந்துன் ஜெயவர்தன (விருது).

2019 ஆம் ஆண்டுக்கான விசேட சந்தர்ப்பங்களின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கே. கைலாசபதி விருது – லங்காதீபவின் திசரி நதீஷா அத்துகோரள (விருது)

2020 ஆம் ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்பு – 2020 ஆம் ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்பு 'தேஷய' பத்திரிகை வடிவமைப்பு குழு (விருது)

2020 ஆம் ஆண்டின் வணிக ஊடகவியலாளர் (ஆங்கிலம்) – தி சண்டே டைம்ஸின் எதிரிமுனி துருது சந்திரசேகர (விருது).

2019 ஆம் ஆண்டின் சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது – ஞாயிறு லங்காதீபவின் பத்மினி மாதரகே (தகுதிச் சான்றிதழ்)

2019 ஆம் ஆண்டின் புலனாய்வு ஊடகவியலாளர் விருது– தி சண்டே டைம்ஸின் சந்திரநாதன் ரூபதீசன் (தகுதிச் சான்றிதழ்)

2020ஆம் ஆண்டுக்கான ஸ்கூப் ஒ.ப் த இயர் விருது – கபில பண்டார மற்றும் தி சண்டே டைம்ஸ் குழு (விருது)

2020 ஆம் ஆண்டின் இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான செபால குணசேன விருது – தொடர்ச்சியான முயற்சிகள் மற்றும் ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதில் தீவிர பங்களிப்புக்காக ஜாவித் யூசுப்புக்கு வழங்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டின் இளம் நிருபருக்கான டென்சில் பீரிஸ் விருது– தி சண்டே டைம்ஸின் தருஷி வீரசிங்க (தகுதிச் சான்றிதழ்)

2020 ஆம் ஆண்டின் சிறந்த புகைப்பட பத்திரிக்கையாளர் விருது– லங்காதீப பி.கே.எல்.எச் ஜொஹான்ஸ் ((தகுதிச் சான்றிதழ்)

சர்வகட்சிக் கூட்டத்தில் பேசியவை நீண்டகாலத் தீர்வாகுமா?

ஒருசில கட்சிகளின் தலைவர்கள், அவர்கள் சார்ந்த கட்சிகளின் பிரதிநிதிகளைத் தவிர, ஏனைய கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் (23) கூடிய சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைத்திருந்தனர்.

சர்வகட்சிக் கூட்டத்துக்கான அழைப்பைப் புறக்கணித்த கட்சிகள், தன்னிலை விளக்கமளித்திருந்தன. கிடைக்கும் ஒரு சந்தர்ப்பத்தில், தங்கள் மக்கள் சார்ந்த பிரச்சினையையும் எடுத்துரைத்துவிடவேண்டுமென இன்னும் சிலர் தெரிவித்திருந்தனர். அரசாங்கத்துடன் முரண்டு பிடித்துக்கொண்டிருக்கும் 11 கட்சிகளின் சார்பிலும் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அழைப்பின் பேரில், இந்தச் சர்வகட்சிக் கூட்டத்துக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். அரசாங்கத்தின் பிரதான பங்காளியின் கோரிக்கைக்கு, ஜனாதிபதி செவிசாய்த்துள்ளார். அதிலொன்றும் தவறில்லை. ஒவ்வோர் இனக் குழுமங்களைச் சார்ந்தவர்களுக்கு வெவ்வேறான பிரச்சினைகள் இருக்கின்றன. சிலவற்றை அரசியலமைப்பின் திருத்தங்களின் ஊடாகவே தீர்வுகாணமுடியும். இன்னும் சிலவற்றை பேச்சுவார்த்தையின் ஊடாகத் தீர்த்துவிடலாம். ஆனால், நாடு முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் 'பொருளாதார நெருக்கடி', சகல இனத்தவர்களுக்கும் பொதுவானதாகும்.

இந்தப்பொதுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடலுக்கு அப்பால் சென்று, பழையன கிளறப்பட்டன. யானையைப் போல தனியனாக நின்ற ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பதிலளித்து கேள்விகளையும் கேட்டிருந்தார்.

தொனிப்பொருளுக்கு அப்பால் செல்வதை அவதானித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மன்னிப்புக் கேட்டது மட்டுமன்றி, புறக்கணித்த கட்சிகளுக்கும் மறுஅழைப்புவிடுத்தார்.

ஆனால், புதிய வரவு- செலவுத் திட்டம், சிங்கள-தமிழ் புதுவருட புத்தாண்டுக்கான நிவாரணம் என்றெல்லாம் அறிக்கைவிட்டிருந்தனர். இது, அதல பாதாளத்துக்குள் விழுந்து கொண்டிருக்கும் பொருளாதாரத்தை, மீளக் கட்டியெழுப்புவதற்கான, தூரநோக்குக் கொண்ட யோசனைகளாக அமையவில்லை.

மக்களை சந்தோஷப்படுத்தவும், புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்குமான ஒரு தற்காலிக யோசனைகளாகும். ஏனெனில், 'மீண்டெழுதல்' என்பது, இலகுவான காரியமாக அமையாது. இதற்கிடையே, அடுத்த தேர்தலுக்கு நிவாரணம் வழக்கி, மக்களை வளைத்துப்போடும் நோக்கிலேயே 'நிவாரணப் பொதி' கதை உலாவுகிறது.

எம்முன்னிலையில் துருத்திக்கொண்டு நிற்பது, பொருளாதார நெருக்கடியாகும். அதனை, எவ்வித அரசியல் இலாபங்களும் இன்றித் தீர்த்து, பொருளாதார ஸ்திரத் தன்மையை பேணுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். அது தொடர்பில், சர்வகட்சி மாநாட்டில் ஆழமாக அலசி ஆராய்ந்து இருக்கலாம்.

அதற்குப்பின்னர், ஒவ்வோர் இனங்களின் பிரச்சினைகளையும் கலந்துரையாடி, தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முயலவேண்டும். அதனூடாகவே, அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகரமுடியும்.

இவ்வரசாங்கத்தின் முதலாவது சர்வகட்சி மாநாட்டில் கலந்துரையாடப்பட்டவை ஓர் ஆரம்பப் புள்ளியாகுமே தவிர, பொருளாதார நெருக்கடிக்கான தீர்வாக அமையாது. நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எடுத்துவைத்திருக்கும் படிமுறையை மிகவிரைவாக செயற்படுத்த வேண்டுமே தவிர, அற்பசொற்ப ஆசைகளை நிறைவேற்றுவதற்கான தற்காலிகத் தீர்வை வழங்க முயலக்கூடாது என்பதே எமது ஆலோசனையாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

ஒப்பீடு செய்து ஒருவரைத் தாழ்த்துவது அநாகரிகமானது. ஆழுமை பெற்ற நபர்கள் பற்றி, வீணான முறையில் தாழ்த்தினால், அவர்களுடைய மனோநிலையில் சற்றுத் தளம்பல்கள் உருவாகலாம்.

எந்தவொரு விடயத்திலும் அனுபவம் இல்லாதவர்கள் கூட, குறித்த விடயத்துடன் அல்லது, அவை சார்ந்த மற்றும் சாராத விடயங்களுடன் ஒப்பிட்டுப் பேசுவது அர்த்தமற்றது.

பலருடைய வீடுகளில் தங்கள் பிள்ளைகளின் படிப்புப் பற்றி, அடுத்த வீட்டுப் பிள்ளைகளுடன் எவர் கெட்டிக்காரர் என்று ஒப்பீடு செய்வதுண்டு. எல்லோராலும் படிக்க முடியும். அடுத்த வீட்டுப் பிள்ளையின் பரீட்சை முடிவுகள், தங்கள் பிள்ளையின் பரீட்சை முடிவுகள் சற்றுக் குறைவாக இருந்தால், அவர் பெற்ற பெறுபேற்றைப் பாராட்டாது, பொறாமையுடன் தங்கள் பிள்ளை குறைந்த மதிப்பெண்களைப் பெற்றுவிட்டாரே என ஒப்பீடு செய்வது தவறானது. இது பிள்ளைகளைப் பாதித்துவிடலாம். திறமைகளுக்கு எல்லை ஏது?

கெட்டித்தனமான மாணவர்களாக எல்லோரும் மாறிவிடலாம். சாதனைகளை ஒருபோதும் எடைபார்த்தலாகாது. ஒருவரின் திறமைகளைப் பாராட்டலாம். யாவரின் பெருமைகளையும் கௌரவம் செய்க!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஸ்ரீ லங்கா முதல் சிங்கலே வரை – 12

தரப்படுத்தலும் தரந்தாழ்ந்த அரசியலும்

தெ. ஞானசீர்த்தி
மீநிலங்கோ

1970ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள், தமிழ்த் தேசியவாத அரசியலில் மிகுந்த பின்னடைவை ஏற்படுத்தியிருந்தன. அந்தப் பின்னடைவைச் சரிக்கட்டும் முகமாக, அப்போதிருந்த ஆட்சியாளரின் நடவடிக்கைகள் இருந்தன.

இலங்கையின் இனமுரண்பாட்டின் முக்கியமான திருப்புமுனைகளில் ஒன்றாகச் சொல்லப்படுவது, 1971ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகத் தரப்படுத்தல்; இதைச் சுற்றி நிகழ்ந்த நிகழ்வுகள், தரம் தாழ்ந்த அரசியலின் பக்கங்களை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

தரப்படுத்தலை நியாயப்படுத்தி, சிங்கள சமூகத்தினர் முன்வைக்கின்ற வாதங்கள் ஒருபுறம் இருக்க, இதற்கு ஆதரவாகத் தமிழர் குரல்களும் எழுந்துள்ளன. அவை அரசியலின் பாற்பட்டு, சமூக அங்கிகாரத்துக்கான குரலாக, அனைவருக்குமான வாய்ப்பான குரலாக அமைந்தது.

இலங்கை பல்கலைக்கழகங்களில், பேராதனை பல்கலைக்கழகத்தில் மட்டுமே பொறியியல் பீடம் இருந்தது. அந்தப் பொறியியல் பீடத்தில், ஆண்டுதோறும் 150 மாணவர்கள் உள்ளீர்க்கப்படுவதும் அதில் 30 - 50 சதவீதமானோர் தமிழ் மொழி மூல மாணவர்களாக இருப்பதும் தொடர்ந்தது.

1970ஆம் ஆண்டு, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி, பொறியியல் பீடத்துக்குத் தகுதிபெற்றோரில் 80 சதவீதமானவர்கள் தமிழ் மொழி மூல மாணவர்களாக இருந்தமை, மிகப்பெரிய விவாதப் பொருளானது.

இதில் கவனிப்புக்குரியது யாதெனில், 80சதவீதமான தமிழ் மாணவர்கள் தகுதிபெறுவது சாத்தியமற்ற ஒன்றல்ல. அதேவேளை, யாழ்ப்பாணத்தில் டியூசன் கலாசாரம் வேர்விடத் தொடங்கியிருந்தது. பல்கலைக்கழகத்துக்குள் உள்நுழைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், இந்த டியூசன்கள் பெரியவில் நடத்தப்பட்டதோடு, அவை பரீட்சைப் பெறுபேறுகளில் கணிசமாகப் பங்காற்றின.

எனினும், சிங்கள மக்கள் நடுவே நியாயமான ஐயங்கள் எழுந்தன. அதை ஊதிப்பெருப்பிக்கும் பேரினவாத விஷமத்தனத்தை, ஐக்கிய தேசிய கட்சியும் ஜே.வி.பியும் முன்னெடுத்தன. தனது ஆதரவுத்தளத்தை, இளையோர் மத்தியில் அதிகரிப்பதற்கான வாய்ப்பாக, இதை ஜே.வி.பி பயன்படுத்தியது.

இவ்விடயத்தின் உண்மைத் தன்மையை அறியத் தடையாகவும் திசைதிருப்பல் முயற்சியாகவும், பரீட்சை முடிவுகள் சார்ந்து இரண்டு அடிப்படையான ஊகங்கள் திட்டமிட்டுப் பரப்பப்பட்டன.

முதலாவது, தமிழ் பரீட்சகர்கள் வேண்டுமென்றே தமிழ் மாணவர்களுக்கு அதிகளவு புள்ளிகளை வழங்கியுள்ளனர். இரண்டாவது, பரீட்சை வினாத்தாள்கள் முற்கூட்டியே வெளியாகியுள்ளன.

இவ்விரு குற்றச்சாட்டுகளையும் விசாரிக்க அரசாங்கம் முடிவெடுத்தது. விசாரணைகளின் முடிவில், இக்குற்றச்சாட்டுகள் பொய்யானவை; எதுவித ஆதாரமுமற்றவை என்பது புலனானது. ஆனால், அரசாங்கம் பாரிய தவறொன்றை இழைத்தது.

விசாரணை முடிவுகள் வெளிவர முன்னரே, மொழி அடிப்படையில் தரப்படுத்தலை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முடிவெடுத்தது. இது, இலங்கையின் வரலாற்றில் எடுக்கப்பட்ட, நீண்டகாலப் பாதிப்புகளை உருவாக்கிய மோசமான முடிவானது.

அரசாங்கத்தின் இந்தமுடிவு, விசாரணை முடிவுகளின் பயன்களையும் அதன் உண்மையையும் பயனற்றதாக்கியது. இதன்மூலம் பேரினவாத விஷமத்தனம் நியாயமானது போன்றதொரு தோற்றத்தை உருவாக்கியது. இதை ஜே.வி.பி சிங்கள சமூகத்தில் தீவிரமாகப் பிரசாரம் செய்தது. இது 1972இல் ஜே.வி.பி கிளர்ச்சிக்குப் பகுதிக் காரணியானது.

அரசாங்கம், மொழிவாரித் தரப்படுத்தல் முறையைப் புகுத்தியதால், தமிழ்மொழிமூல மாணவர்களின் தொகை 30 சதவீத அளவுக்குக் குறைக்கப்பட்டது. இது தமிழ் இளைஞர்கள் மத்தியில் மிகப்பெரிய கோபத்தை உண்டுபண்ணியது. அரசாங்கத்தின் இந்த முறைமை, மிகவும் அநீதியானதாக இருந்தபோதும், எந்தப் பிரதான கட்சியும் இதை எதிர்க்கவில்லை. குறிப்பாக, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் மௌனம் குறித்து நோக்கப்பட வேண்டியது.

சிங்கள சமூகத்தில், பல்கலைக்கழக அனுமதியில் சிங்களவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்ற வாதத்துக்கு எதிர்வாதமாக, 1956 முதல் தமிழர்கள் அரச உத்தியோகங்களில் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள் என்ற உண்மை சொல்லப்படுவதில்லை.

1956இல் தனிச் சிங்களச் சட்டத்தின் உருவாக்கத்தின் வழியிலும் திட்டமிட்ட இனஒதுக்கல் நடவடிக்கைகளின் வழியிலும், இலங்கை அரசாங்கங்கள் தொடர்ச்சியாக அரசபணிகளில் தமிழரை ஓரம்கட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. இதற்கு எந்த அரசும் விலக்கல்ல. தமிழரசுக் கட்சி ஆதரவு கொடுத்த 1965 ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி உட்பட என்பது குறிப்பிடத்தக்கது.

1956ஆம் ஆண்டு, இலங்கை நிர்வாக சேவையில் 30 சதவீதமாக இருந்த தமிழர்களின் எண்ணிக்கை, 1970இல் வெறும் ஐந்து சதவீதமாகக் குறைந்தது. அதேபோல, 1956இல் எழுதுவினைஞர் பணியிடங்களில் 50 சதவீதமாக நிரம்பியிருந்த தமிழர்கள் 1970இல் ஐந்து சதவீதமாகினர். 1956இல் இருந்த தொழில்வல்லுநர்கள் (மருத்துவர்கள், பொறியியலாளர்கள், விரிவுரையாளர்கள்) தொகையில் 60 சதவீதமானோர் தமிழர்களாக இருந்தனர்.

இத்தொகை 1970இல் 10 சதவீதமானது. அதேபோல, இராணுவத்தில் 40 சதவீதமாகவும் பிறஅரச தொழிற்றுறைகளில் 40 சதவீதமாகவும் இருந்த தமிழர்கள், 1970இல் இராணுவத்தில் ஒரு சதவீதமாகவும் பிறதொழிற்றுறைகளில் ஐந்து சதவீதமாகவும் குறைந்தனர்.

வடக்கில் தரப்படுத்தலால் பாதிக்கப்பட்டோர் ஒரு சிறுதொகையினரே ஆவார். இது படித்த யாழ்ப்பாண நடுத்தர வர்க்கத்தின் பிரச்சினையாகவே இருந்தது. ஆனால், இது மாணவர்களின் பிரச்சினையாதலால், இதற்கு ஒரு பரந்துபட்ட சமூக ஆதரவு, தமிழ் மக்கள் மத்தியில் இருந்தது.

தேர்தலில் துவண்டுபோயிருந்த தமிழரசுக் கட்சிக்கும் ஏனைய தமிழ்த் தேசியவாதிகளுக்கும் தரப்படுத்தல் வாய்ப்பான ஆயுதமானது. இக்காலத்தில், பதியூதின் மஹ்மூத் கல்வி அமைச்சராக இருந்தார். தரப்படுத்தலையும் பதியூதினையும் இணைத்து, சிங்கள முஸ்லிம் விரோதமாகக் கட்டமைக்க முனைந்தார்கள். இது, தமிழரோடு ஒன்றாக வாழ்ந்த முஸ்லிம்களும் சங்கடத்தை உண்டுபண்ணியது.

இந்நிலையில், இதற்கெதிராகப் போராடிய இளையோர் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டனர். தமிழரசுக் கட்சியும் பிற தமிழ் தேசியவாதிகளும், அதற்கு ஒரு தமிழின உணர்வுப் பரிமாணத்தை வழங்கியதோடு நில்லாது, கல்வி அமைச்சராக இருந்தவர் ஒரு முஸ்லிம் என்பதைப் பயன்படுத்தி, அதற்கு முஸ்லிம் விரோத பரிமாணத்தையும் வழங்க முற்பட்டனர். அந்த முயற்சி வெற்றி அளிக்காவிடினும், அது ஏற்படுத்திய கசப்புணர்வு புறக்கணிக்கத்தக்கதல்ல.

தரப்படுத்தல் முறையின் தவறுகளை எல்லோரும் அறிந்திருந்தனர். ஆனால், அதற்கான மாற்றுகளை முன்வைக்க எவரும் முன்வரவில்லை. இம்முறையைக் கடுமையாக எதிர்த்த தமிழரசுக் கட்சியால், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையொன்றை முன்மொழியவோ பல்கலைக்கழக அனுமதி தொடர்பில் சிங்கள சமூகத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஐயங்களைக் களையவோ முடியவில்லை.

தரப்படுத்தல் முறையில் இருந்த தவறுகளைச் சரிக்கட்ட, மாவட்ட அடிப்படையிலான விகிதாசார அனுமதி முறை புகுத்தப்பட்டது. இதனால் யாழ்ப்பாணத்துக்கு வெளியே வடக்கு-கிழக்கில் இருந்த மாணவர்கள் பயனடைந்தனர். இதனால், தரப்படுத்தலை ஓர் அரசியல் கருவியாக்க இயலாமல் போயிற்று.

இந்த மாவட்ட அடிப்படையிலான முறையை உருவாக்கியதில், அமைச்சராக இருந்த பீட்டர் கெனமனுக்கு முக்கிய பங்குண்டு. இந்தமுறை நகர்மயமான பிரதேசங்களில் இருந்த மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகத்துக்குள் நுழையவியலும் என்ற நிலையை மாற்றியது. அதேவேளை, இது பல்கலைக்கழகத்துக்குள் ஒரு பிரதேசவாதத்தை குறிப்பாக தமிழ் மாணவர்களிடையே உருவாக்கியது என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஒருபுறம் தரப்படுத்தல் மூலம், ஒருதொகுதி தமிழர்களுக்குப் பல்கலைக்கழகக் கல்வி மறுக்கப்பட்டது. அதேவேளை, ஈழத்தமிழரின் வரலாற்றை எடுத்து நோக்கினால் கல்வி என்பது, அனைவருக்குமானதாக மாறுவதற்கு நீண்டகாலம் எடுத்தது.

அவ்வகையில், தரப்படுத்தலின் விளைவால், யாழ்ப்பாணம் தவிர்ந்த வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருந்தான பல்கலைக்கழக நுழைவானது, புதிய நம்பிக்கைகளையும் வாய்ப்புகளையும் கொடுத்து. மறுபுறம், 1970ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளை மையமாகக் கொண்டு எழுந்த நெருக்கடி, ஜே.வி.பி போன்ற தோற்றத்தில் இடதுசாரியான அடிப்படையில் இனவாதமான ஓர் அமைப்பின் எழுச்சிக்கும் அதன் தொடர்ச்சியான கிளர்ச்சிக்கும் வழிகோலியது.

இலவசக் கல்வியின் விளைவாக, 1960களின் பிற்பகுதியில், இலங்கை கிட்டத்தட்ட முழுமையான கல்வியறிவை அடைந்தது. வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்காக, 1959ஆம் ஆண்டு தொடக்கம் சிங்களம், தமிழ் மொழிகளில் பல்கலைக்கழகக் கல்வி கிடைக்கப்பெற்றது. இருப்பினும் ஏற்றத்தாழ்வுகள் மறையவில்லை.

1970ஆம் ஆண்டில் ஒரு சதவீதமான இளைஞர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்குள் நுழைந்தனர். பல்கலைக்கழக அனுமதி தேர்வுக்கான முடிவுகள், வர்க்கரீதியான வேறுபாடுகள் வியாபித்திருப்பதைத் தெளிவாகக் காட்டியது. இவற்றின் விளைவுகளையே, இலங்கை இளைஞர் கிளர்ச்சிகளின் வழி சந்திக்க நேர்ந்தது.

கடிதங்கள்

பஸ் தரிப்பிடத்துக்கு செல்ல வாகனங்கள் இடைஞ்சல்

நுவரெலியா, நானுஓயா நகரத்தில் காணப்படும் பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில், தலவாக்கலை, ஹட்டன் போன்ற நகரங்களுக்குச் செல்லும் பஸ்களுக்காகக் காத்திருக்கும் போது, குறித்த இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் வருகைதந்தவுடன், உடனடியாகச் சென்று ஏறுவதற்கு பெரிதும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக பிரயாணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதற்குப் பிரதானமான காரணமாக, நானுஓயா எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை நிரப்பிக் கொள்வதற்காக வரிசையில் காத்துநிற்கும் வாகனங்கள், நானுஓயா பிரதான பஸ் தரிப்பு நிலையத்தை மறைத்து நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், பஸுக்காகக் காத்திருக்கும் பயணிகள், பாதிப்புகளையும் உயிராபத்துகளையும் எதிர்கொள்கிறார்கள்.

நுவரெலியா பிரதேச சபை தவிசாளர், நானுஓயா போக்குவரத்து பொலிஸ், பயணிகள் போக்குவரத்து அதிகார சபை போன்ற நிறுவனங்களின் கவனத்துக்கு, இந்த உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமை குறித்து ஏற்கெனவே முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தாம் செல்ல வேண்டிய இடங்களுக்கான பஸ் வந்தவுடன், அவசரமாக வீதியைக் கடந்து செல்ல விளையும் போது, வீதி விபத்துகள் சம்பவிக்கும் முன்னர், தக்க தீர்வை ஏற்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகளிடம் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

பா. பாலேந்திரன்

‘தேசத்தை சரியான பாதையில் அழைத்துச் செல்வது’

அரசாங்கத்தின் பங்காளிக்கட்சிகளில் 11 கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், கண்டி, மல்வத்து மஹாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரரை நேற்று (24) சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன், ‘தேசத்தை சரியான பாதையில் அழைத்துச் செல்வது’ என்ற தேசிய நிகழ்ச்சித் திட்டத்தையும் கையளித்தனர். இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, டிரான் அலஸ், அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டோர் அடங்கியிருந்தனர்.

(படங்கள்: ஷேன் செனவிரத்ன)

மலையக பிரதிநிதிகள்

பாசாங்கு காட்டுகின்றனர்

வேலுகுமார் எம்.பி தெரிவிப்பு

மலையக பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் இருந்து சகல சலுகைகளையும் பெற்றுக்கொண்டு, அரசாங்கத்தின் செயற்பாடுகளை எதிர்ப்பதாக பாசாங்குகாட்டி வருகின்றனர் என ஜனநாயக மக்கள் முன்னணியின் உபதலைவரும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலு குமார் தெரிவித்தார். மக்களின் பிரச்சினைகளைப் பார்ப்பதை விட, தமது அரசாங்கத்தை காப்பாற்றிக்கொள்ள தட்டித் தடுமாறுவதே அதிகமாக உள்ளது. இந்நிலையில், அரசாங்கத்தில் உள்ள மலையக பிரதிநிதிகள், அரசாங்கத்திடம் இருந்து சகல சலுகைகளையும் பெற்றுக்கொண்டு, அரசாங்கத்தின் செயற்பாடுகளை எதிர்ப்பதாகப் பாசாங்குகாட்டி வருகின்றனர். அதற்கு அபிவிருத்திக்காக இருக்கின்றோம் என நியாயமும் கூறுகின்றனர். இன்று அரசாங்கத்தில் இருந்துகொண்டு, அரசாங்கத்தை எதிர்ப்பதை போல ஊடகங்களுக்கு கருத்து கூறுவது, ஒரு பாணியாக மாறியுள்ளது.

அதிலே மலையக மக்களின் பிரதிநிதிகள், முதன்மையானவர்களாக உள்ளனர். எமது மக்கள் இன்று, ஒரு வேளை உணவுக்கே திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. வருமானம் குறைவு, விலைவாசிகள் அதிகரிப்பு என்பன பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளன.

மக்களுக்காகக் குரல் கொடுக்க இதனை விட வேறு சந்தர்ப்பம் கிடையாது. ஆனால், ஆளும் தரப்பு மௌனமாக உள்ளது. வாய் திறந்து மக்களுக்காகப் பேசுவதைக் காணமுடியவில்லை.

மாறாக, தமது சலுகைகள் மீதே குறிவைத்து செயற்படுகின்றனர். இது சலுகைகளைப் பெறுவதற்கு மக்களைக் காட்டிக்கொடுக்கும் நேரமல்ல; அரசியல் லாபம் பெறுவதற்கு, நாடகம் ஆடும் நேரமுமல்ல. மக்களைக் காப்பாற்றுவதற்காக அரசாங்கத்துக்குள் விவாதங்களில் ஈடுபட வேண்டிய நேரம்; பேரம் பேசலில் ஈடுபடவேண்டிய நேரம். ஆனால், இவை எதையும் காணமுடியவில்லை என்றார்.

ஹட்டன், கொட்டகலையில்

எரிவாயு பதற்றம்

பொலிஸார் தலையிட்டு சுமூகமாக்கினர்

■ எஸ். கணேசன், ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன், கொட்டகலை பகுதிகளுக்கு பல நாள்களுக்குப் பிறகு நேற்றைய தினம் (24) சமையல் எரிவாயு விநியோகம் முன்னெடுக்கப்பட்டது. அப்போது, அவ்விரு நகரங்களிலும் அமைதியின்மை ஏற்பட்டது.

இதற்கமைய, கொட்டகலை நகரில் கூடுதல் விலைக்கு சமையல் எரிவாயு விற்பனை செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமக்கு பட்டியல் விலையில் சமையல் எரிவாயுவை வழங்குமாறு வலியுறுத்தியும் நுகர்வோர் நேற்று (24) சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஹட்டன்- நுவரெலியா வீதி ஊடான போக்குவரத்து சுமார் ஒரு மணிநேரம் ஸ்தம்பிதமடைந்தது. சமையல் எரிவாயு விற்பனை நிலையத்தில் இருந்தவர்களுக்கும், நுகர்வோருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கமும் ஏற்பட்டது.

கொட்டகலை நகரில் இரு வர்த்தக நிலையங்கள் ஊடாக சமையல் எரிவாயு விநியோகிக்கப்படுகின்றது. அதிலொரு கடையில் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர் 4 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

“லாஃப் காஸின் விலை அதிகரித்துள்ளது. எனினும், லிட்ரோ கேஸின் விலை இன்னும் அதிகரிக்கப்படவில்லை. எனவே, 75 சதவீத விலை அதிகரிப்புடன் எதற்காக லிட்ரோ காஸ் விற்பனை செய்யப்பட வேண்டும்” என நுகர்வோர் கேள்வி எழுப்பியதுடன், சம்பவ இடத்துக்கு ஊடகவியலாளர்கள் சென்ற பிறகு, வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு, வர்த்தகர் சென்றுள்ளார்.

அதன்பின்னர், திம்புள்ள, பத்தனை பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகைதந்து, மூடப்பட்ட வர்த்தக நிலையத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தகரிடம் கோரிக்கை விடுத்ததுடன், பட்டியல் விலைக்கே சமையல் எரிவாயுவை விநியோகிக்குமாறு பணிப்புரை விடுத்தனர்.

அதேபோல், ஹட்டன் பிரதேசத்துக்கு லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தால், நேற்று (24) அதிகாலை சமையல் எரிவாயு சிலிண்டர்கள் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், அதனை நுகர்வோருக்கு விநியோகம் செய்யும் போது, விற்பனை முகவர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

சிலருக்கு மாத்திரமே சமையல் எரிவாயு சிலிண்டரை விநியோகித்த முகவர் நிலைய உரிமையாளர், நுகர்வோருக்கு சிலிண்டரை விநியோகிக்கும் பணியை இடைநடுவில் நிறுத்திவிட்டு, ஏனைய சிலிண்டர்களை ஹோட்டல்களுக்கு வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளனர். இதனையடுத்து. அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

எனினும் இதன்போது ஹட்டன் பொலிஸார் தலையிட்டு, நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன், பொலிஸாரின் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் இவ்விரு நகரங்களிலும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

கணினி உபகரணங்கள் வழங்கப்பட்டன

ஜனாதிபதி, கோட்டாபய ராஜபக்ஷவின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய, கல்விக்கு முன்னுரிமை வழங்கி, ஊவா மாகாணத்தில் காணப்படும் குறைந்த வசதிகளுடன் கூடிய தமிழ்ப் பாடசாலைகளுக்கு கணினி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (23) நடைபெற்றது.

ஒன்றிணைந்து கிராமத்தை அபிவிருத்தி செய்ய

“வாருங்கள்”

“பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்கள், பலரால் முன்னெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு தனி நபரும் தங்களுக்கு ஏற்ற வகையில் அபிவிருத்திப் பணிகளை செய்வதால், அவற்றின் ஊடாகப் பாரிய மாற்றத்தை காண முடியாமல் இருப்பதுடன், சமூகத்தில் பிரச்சினைகளும் தீர்ந்ததாக இல்லை

■ துவாரகஷான்

“நாம் ஒன்றிணைந்து கிராமத்தை அபிவிருத்தி செய்வோம்” என்ற தொனிப்பொருளில், லிந்துலை பொது சுகாதார காரியாலயத்தின் வைத்திய அதிகாரிகளான துரைராஜ் ரெஷ்மி, ஆறுமுகம் ஜெயராஜன் தலைமையில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அக்கரப்பத்தனை, மன்றாசி நிஷாந்தினி கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (23) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில், வைத்திய அதிகாரி துரைராஜ் ரெஷ்மி உரையாற்றுகையில்,

லிந்துலை பொது சுகாதார பிரிவில் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்கள், பலரால் முன்னெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு தனி நபரும் தங்களுக்கு ஏற்ற வகையில் அபிவிருத்திப் பணிகளை செய்வதால், அவற்றின் ஊடாகப் பாரிய மாற்றத்தை காண முடியாமல் இருப்பதுடன், சமூகத்தில் பிரச்சினைகளும் தீர்ந்ததாக இல்லை.

எனவே, அனைத்து அமைப்புகளையும் ஒன்றிணைத்து, சமூக அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்காக எமது கிராமத்தை அபிவிருத்தி செய்வோம் என்ற அடிப்படையில் அமைப்புகளை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை நாம் இன்று முன்னெடுத்துள்ளோம்.

தற்போது கிராமப்புறங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் குடும்ப வன்முறைகள், பாலியல் ரீதியான வன்முறைகள், உளவியில் ரீதியான பிரச்சினைகள், தாய்மார்களின் போஷணை குறைபாடு, இளம் வயது திருமணம் உள்ளிட்ட பிரச்சினைகள் சமூகத்தில் அதிகரித்து வருகின்றன.

இவற்றைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து, செயல்படுவதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளை நாம் குறைத்து, முழுமையாக ஒழிக்க முடியும் என்றார்.

பசறையில்

பாவனைக்கு உதவாத பொருட்கள் சிக்கின

■ ராமு தனராஜா

பசறை சுகாதார பிரிவினரால், பசறை நகரிலுள்ள 20 வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது விற்பனைக்காக பதுக்கி வைக்கப்படிருந்த பாவனைக்கு உதவாத மற்றும் காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன், குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த சுற்றிவளைப்பின் போது கைப்பற்றப்பட்ட, சுமார் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான, காலாவதியான உணவுப் பொருட்களை நீதிவான் நீதிமன்றில் முன்வைப்பதற்கான நடவடிக்கைகளையும் பசறை சுகாதார பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கலந்துரையாடல்

■ பி.கேதீஸ்

மத்திய மாகாணத்தில் இயங்குகின்ற ஆசிரியர் கூட்டு தொழிற்சங்கங்களுக்கும் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிறி பியதாஸவுக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (23) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது,

ஆசிரியர் விடுதலை முன்னணியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் என்.டி.எஸ். நாதன் கலந்து கொண்டு மத்திய மாகாணத்தில் அதிபர், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

குறிப்பாக ஆசிரியர்களின் இடமாற்றம், ஆசிரியர்களின் சம்பள நிலுவை போன்றன தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

25 வருட கால முன்மாதிரியான

வளர்ச்சியையும் சிறப்பையும் கொண்டாடும் Ex-pack

Ex-pack Corrugated Cartons PLC, உள்நாட்டிலும் சர்வதேச சந்தைகளையும் சேர்ந்த புகழ்பெற்ற நிறுவனங்களுக்கு பொதியிடல் தீர்வுகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்வதுடன், தொடர்ந்தும் பல சவால்களுக்கு முகங்கொடுத்திருந்த போதிலும் சிறப்பான முன்னேற்றம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றினூடாக தனது 25 வருட பூர்த்தியை வெற்றிகரமாகக் கொண்டாடுகின்றது. இந்நிறுவனம் தொடர்ந்தும் உறுதியான வளர்ச்சியைப் பதிவு செய்த வண்ணமுள்ளது.

இதைக் குறிக்கும் வகையில், Ex-pack இனால் அதன் நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலை வளாகத்தில் சகல ஊழியர்களின் பங்கேற்புடன் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் போது ஊழியர்களுக்குப் பெறுமதியான அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் அடங்கிய பொதியொன்று அவர்களின் குடும்பத்தாருக்காக வழங்கப்பட்டிருந்தது. இலங்கையில் அதிகளவு விரும்பப்படும் அலைவுநெளிவுள்ள பொதியிடல் தயாரிப்புகள் விநியோகத்தராக Expack ஐ உயர்த்துவதற்கு பங்களிப்பு வழங்கியிருந்த சகல பங்காளர்களுக்கும் Expack இன் தவிசாளர் சத்தார் காசிம், தமது நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்திருந்தார்.

1997ஆம் ஆண்டு தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்த Ex-pack, படிப்படியாக செயற்பாடுகளை விஸ்தரித்திருந்ததுடன், தொடர்ச்சியாகச் சாதனைமிகுந்த உற்பத்திகளைப் பதிவு செய்திருந்ததுடன், இலங்கையின் அலைவுநெளிவுள்ள பொதியிடல் தொழிற்றுறையில் முன்னணி நிறுவனமாகத் தன்னைத் தரமுயர்த்தியுள்ளது.

உள்நாட்டு சந்தையிலும், ஆசிய, ஆபிரிக்க, மத்திய கிழக்கு பிராந்திய சர்வதேச நாடுகளுக்கும் Expack சேவைகளை வழங்குகின்றது. இலங்கையில் காணப்படும் சிறந்த அலைவுநெளிவுள்ள பொதியிடல் தீர்வு தயாரிப்பாளராக

PUM நெதர்லாந்தால் பிரேரிக்கப்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் Ex-pack பல விருதுகளையும் கௌரவிப்புகளையும் பெற்றிருந்தது. இவற்றில், ஏற்றுமதியாளர்களுக்கான சிறந்த சேவை வழங்குநர்கள் (பாரிய பிரிவு) என்பதற்கான NCE தங்க ஏற்றுமதி விருது, CNCI சிறந்த 10 விருது (மேலதிக பெரிய பிரிவு), NCCSL-தேசிய வியாபார சிறப்பு விருதுகள் அடங்கலாக, லங்கா ஸ்டார் 'புத்தாக்கமான பொதியிடல்' விருது, லங்கா CSR விருதுகள், கிறீன் விருதுகள் போன்றன அடங்குகின்றன. ISO 9001-2015, ISO 14001-2015, FSC COC, WRAP (Worldwide Responsible Accredited Production)சான்றைப் பெற்ற நிறுவனமாக Expack திகழ்கின்றது.

Ex-packஇல் பேணப்படும் சிறந்த பணியிட கலாசாரம் என்பது பன்முகத்தன்மை, சமத்துவம், உள்ளடக்கம் போன்ற பெறுமதிகள், நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்துள்ளதாக தவிசாளர் சத்தார் காசிம் தெரிவித்தார். நிறுவனத்தின் ஊழியர்களுக்கு முன்னுரிமையளிக்கும் திட்டங்களினூடாக, அதன் 300 க்கும் அதிகமான உறுதியான பணியாளர்கள் பல்வேறு வழியில் ஊக்குவிக்கப்பட்டுள்ளதுடன், வலுவூட்டப்பட்டுள்ளனர். நிறுவனத்தில் பேணப்படும் திறந்த கதவு கொள்கையினூடாக, எந்தவோர் ஊழியரும் எந்நேரத்திலும் முன்வந்து, எந்தவொரு விடயம் பற்றியும் கலந்துரையாடக்கூடிய பணிச்சூழல் பேணப்படுகின்றது.

இவ்வாறான நடவடிக்கைகளினூடாக, தொடர்ச்சியாக மூன்று வருடங்களாக, ஆசியாவில் பணியாற்றுவதற்கு சிறந்த பணியிடங்களில் ஒன்று எனும் தரப்படுத்தலை Ex-pack க்கு பெற்றுக் கொள்ள முடிந்தது. அத்துடன், இலங்கையில் பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக நான்காவது தடவையாகவும் கடந்த ஆண்டில் Great Place to Work இனால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. நெருக்கடியான காலப்பகுதிகளில் சகல ஊழியர்களாலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த அர்ப்பணிப்பு, பங்களிப்பு, மீட்சி உடனான செயற்பாடுகள் போன்றவற்றுக்கு கிடைத்த கௌரவிப்பாக இது அமைந்துள்ளது.

'தொடர்ச்சியாக புத்தாக்கமாக அமைந்திருப்பது' எனும் நிறுவனத்தின் முயற்சிகளினூடாக, வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தீர்வுகளை வழங்க முடிந்தது. ISO 9001-2015, ISO 14001-2015 மற்றும் FSC COC சான்றளிப்புகள் போன்றவற்றினூடாக தனது தரம், பாதுகாப்பு நியமங்களை சர்வதேச மட்டத்தில் பேணுகின்றமைக்கான அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நிலைபேறாண்மை, பொறுப்பு வாய்ந்த உற்பத்தி, சூழல் பாதுகாப்பு போன்றவற்றில் தனது ஒப்பற்ற அர்ப்பணிப்புக்கமைய, சபுகஸ்கந்த பகுதியில் அமைந்துள்ள தனது தொழிற்சாலைக்கு LEED மற்றும் காபன் நடுநிலை சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு co-energi எனும் கட்டட பொறியியல் ஆலோசனை நிறுவனத்துடன் Ex-pack கைகோர்த்திருந்தது.

பொதியிடல் சந்தையில் நிறுவனம் கொண்டுள்ள உறுதியான நிலையின் அடிப்படையில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் அண்மையில் நிறுவனத்தின் பங்குகள் பொதுப் பட்டியலிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வேகமான மொபைல் வலையமைப்பாக SLT-MOBITEL Mobile தெரிவு

SLT-MOBITEL Mobile நிலையான புரோட்பான்ட், மொபைல் வலையமைப்பு பரிசோதனை அப்ளிகேஷன்கள், டேட்டா மற்றும் பகுப்பாய்வுகள் போன்றவற்றில் சர்வதேச ரீதியில் முன்னணியில் திகழும் Ookla இனால் தொடர்ச்சியான மூன்றாவது தடவையாகவும் வேகமான மொபைல் வலையமைப்பாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதனூடாக நாடு முழுவதிலும் பரந்தளவு வலையமைப்பு, உயர்ந்த பாவனையாளர் அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பதில் SLT-MOBITEL இன் மொபைல் காண்பிக்கும் ஒப்பற்ற அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அங்கிகாரம் பெற்ற சர்வதேச இணைய சேவை வழங்குநர்கள், மொபைல் சேவை வழங்குநர்கள் மத்தியில் காணப்படும் சராசரி வேகப் புள்ளிகளைப் பயன்படுத்தி, ஒவ்வொரு சேவை வழங்குநராலும் வழங்கப்படும் டவுன்லோட், அப்லோட் வேகங்கள் அளவிடப்பட்டு, அதற்கமைய நாட்டில் அந்த வலையமைப்பின் வேக செயற்றிறன் தரப்படுத்தப்படும் வகையில் The Speedtest Awards அமைந்துள்ளது.

2017, 2019, 2020, 2021 ஆண்டுகளில் வேகமான மொபைல் வலையமைப்பு எனும் கௌரவிப்புகளை பெற்றுக் கொண்ட SLT-MOBITEL மொபைல், தொடர்ந்தும் சந்தையில் மொபைல் சேவைகள் பிரிவில் முன்னணியில் திகழ்கின்றது. SLT-MOBITEL மொபைல் பாவனையாளர்களுக்கு நாடு முழுவதிலும் சிறந்த இணைப்புத்திறனை பெற்றுக் கொள்வதை உறுதி செய்துள்ளதுடன், கேமிங், ஸ்ட்ரீமிங், சமூக ஊடக வலைத்தளங்கள் ஒப்பற்ற பாவனையாளர் அனுபவத்தை வழங்குகின்றது.

ஆயிரக் கணக்கான நுகர்வோர்களை மையப்படுத்திய Speedtest பரிசோதனைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் Ookla Speedtest Awards என்பது வருடத்தில் இரு தடவைகள் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த ஆய்வின் அடிப்படையில், SLT-MOBITEL மொபைல், அதன் போட்டியாளர்களின் வேகங்களை விட சிறப்பாகச் செயற்படுகின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 2019ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக Speedtest விருதைப் பெற்றுள்ளது.

இந்தக் கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில், மொபிடெல் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி சஷிகா செனரத் கருத்துத் தெரிவிக்கையில், "தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், 'இலங்கையின் வேகமான மொபைல் வலையமைப்பு' என்பதற்கான Speedtest விருதை தொடர்ச்சியான மூன்றாவது வருடமாகவும் பெற்றுக் கொண்டதையிட்டு பெருமை கொள்கின்றோம். சிறந்த இணைப்புத்திறன், ஒப்பற்ற பாவனையாளர் அனுபவத்தை எமது சகல பெறுமதி வாய்ந்த பங்காளர்களுக்கும் வழங்குவதற்கான SLT-MOBITEL இன் அர்ப்பணிப்புக்கான எடுத்துக் காட்டாக இந்த விருது அமைந்துள்ளது.

மொபைல் சந்தையில் பிரதான அங்கமாக 'டேட்டா' அமைந்திருக்கும் நிலையில், எமது வலையமைப்பை மேலும் விரிவாக்கம் செய்வது தொடர்பில் நாம் கவனம் செலுத்துவதுடன், ஒப்பற்ற இணைப்பு அனுபவத்தை பெற்றுக் கொடுத்து, எமது சேவைகளை மேம்படுத்துவது தொடர்பில் நாம் கவனம் செலுத்துகின்றோம். பணியிடத்தில், களிப்பு அல்லது வீடியோக்களை ஒன்லைனில் பார்வையிடுவது என எதுவாக இருந்தாலும் SLT-MOBITEL மொபைல் இனால் அனைத்து இலங்கையர்களின் கனவுகளுக்கும் வலுவூட்ட எதிர்பார்க்கப்படுவதுடன், டிஜிட்டல் புரட்சியில் அடுத்த கட்டத்துக்கு இலங்கையை கொண்டு செல்லும் தேசிய இலக்கை நிவர்த்தி செய்வதாகவும் அமைந்திருக்கும்" என்றார்.

2019ஆம் ஆண்டில், SLT-MOBITEL இனால் தெற்காசிய பிராந்தியத்தில் முதன் முறையாக வணிக 5G திறன்பேசி ஒன்றைப் பயன்படுத்தி, 5G வலையமைப்பு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதனூடாக, சாதனை மிகுந்த வேகப் பெறுமதிகளை பதிவு செய்திருந்தது. தற்போது 5G மற்றும் இதர நவீன இணைப்புத் தீர்வுகளை அறிமுகப்படுத்த தன்னை தயார்படுத்திய வண்ணமுள்ளது.

புதுடெல்லி

ஹிஜாப்: பரீட்சைக்கு சம்பந்தம் இல்லை

உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டு: அவசர வழக்காக விசாரிக்க மறுப்பு

கர்நாடக மாநிலம், உடுப்பி குந்தாப்புராவில் உள்ள அரசு பி.யூ.கல்லூரியில் மாணவ-மாணவிகள் சீருடை அணிந்து வர வேண்டுமென அந்தக் கல்லூரி நிர்வாகம் கடந்த பெப்ரவரி மாதம் அறிவுறுத்தியது.

அங்கு பயின்றுவரும் இஸ்லாமிய மதத்தை சேர்ந்த மாணவிகள் சிலர் சீருடை மீது ஹிஜாப் (தலைப்பகுதியை மூடும் உடை) அணிந்து வந்தனர். அதற்கும் நிர்வாகம் தடை விதித்தது. அத்தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்லாமிய மதத்தை சேர்ந்த அந்த மாணவிகள் பர்தா (உடல் முழுவதும் மூடும் உடை) அணிந்து போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அந்தக் கல்லூரியில் படிக்கும் இந்து மதத்தை சேர்ந்த மாணவ, மாணவிகள், காவி துண்டு அணிந்து கல்லூரிக்கு வந்தனர். இதனை தொடர்ந்து பள்ளி,

கல்லூரிகளில் மத அடையாளத்தை வெளிப்படுத்தும் ஆடைகளை அணிந்துவர தடை விதித்து கர்நாடக அரசு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து, இஸ்லாமிய மதத்தை சேர்ந்த மாணவிகள் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு கடந்த மாதம் 15 ஆம் திகதியன்று தீர்ப்பு வழங்கியது.

இந்நிலையில், மாணவ-மாணவிகளுக்கு வரும் 28 ஆம்திகதி பரீட்சை தொடங்க உள்ளதால் ஹிஜாப் வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று மேல்முறையீடு செய்துள்ள மாணவிகளின் வழக்கறிஞர்களில் ஒருவரான கமத், சுப்ரீம் கோர்ட்டில் நேற்று (24) கோரினின்றார்.

ஆனால், ஹிஜாப் வழக்கை அவசர வழக்காக விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துள்ளது. "இந்தப் பிரச்சினைக்கும் பரீட்சைக்கும் சம்பந்தம் இல்லை. இந்த விவகாரத்தை உணர்வு பூர்வமானதாக்க வேண்டாம்" என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சிக்பள்ளாப்பூர்

பஸ் ஸ்டியரிங்குடன் வலம் வரும் நடத்துநர்

சிக்பள்ளாப்பூர் மாவட்டம் சிந்தாமணி நகரத்தைச் சேர்ந்தவர் மஞ்சுநாத் (வயது 26). இவர் ஒரு தனியார் பஸ்ஸில் நடத்துநராக வேலை செய்தார். அந்த பஸ்ஸின் சாரதியாக வேண்டும் என்று ஆசையிருந்தது. இதற்காக அவர் ஓட்டுநர் பயிற்சி வகுப்புக்கும் சென்றுள்ளார். ஆனால் எதிர்பாராதவிதமாக விபத்தில் சிக்கினார். இதில் அவரது வாழ்க்கையே தடம்புரண்டுவிட்டது.

விபத்தில் சிக்கி, தலையில் பலத்த அடிபட்டதால் மஞ்சுநாத் மனநலம் பாதிக்கப்பட்டார். மனநலம் பாதிக்கப்பட்ட போதிலும் சாரதியாக வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவரது ஆழ்மனதில் பதிந்து போனது.

இதனால் தினமும் காலையில் காக்கி சட்டை அணிந்து கொண்டு, சிந்தாமணி பஸ் நிலையம் வரும் மஞ்சுநாத், தனது கையில் ஒரு ஸ்டியரிங், ஒரு கண்ணாடி எடுத்து கொண்டு நடைபயணமாக புறப்படுகிறார். அவர் தான் பஸ் ஓட்டுவதாக நினைத்து கொண்டு ஒவ்வொரு பஸ் நிறுத்தமாக நின்று பயணிகளை கூப்பிடுவது போல "ஏறுங்கள்" என்றும் இறக்குவதைப் போன்று "இறங்குகள்" எனவும் கூறுகிறார். பின்னர் கையை வைத்தே கியர் போட்டுக் கொண்டு, பஸ் ஓட்டுவது போல், தான் கையில் வைத்துள்ள ஸ்டியரிங்கை அங்குமிங்கும் திருப்பியபடி நடந்து செல்கிறார்.

சென்னை:

இளஞ்சிறார்கள் பைக் ஓட்டினால்

பெற்றோர் மீது சட்டம் பாயும்

பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்டதாக பொலிஸ் உதவி ஆய்வாளர் மகன் உட்பட 5 பேரை போக்குவரத்து புலனாய்வு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

18 வயதுக்கு உட்பட்ட இளஞ்சிறார்கள் வாகனம் ஓட்டினால் அவர்களது பெற்றோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஆணையர் எச்சரித்துள்ளார்.

மெரினா ராதாகிருஷ்ணன் சாலையில், கடந்த 18 ஆம் திகதி நள்ளிரவில் அபாயகரமான முறையில் மோட்டார் சைக்கிள்களை ஓட்டி, சாகசத்தில் ஈடுபட்ட 6 பேரை அடையாறு போக்குவரத்து புலனாய்வு பிரிவு பொலிஸார் கைது செய்தனர். அவர்களது மோட்டார் சைக்கிள்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

புதுவை

ஐஸ் மீது பிணத்தை வைக்கும் அவலம்

புதுச்சேரியில் ஏனாமில் அரசு வைத்தியசாலை உள்ளது. இங்குள்ள சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ள குளிர்சாதன இயந்திரம் பழுதானது. இதைச் சீரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, இறந்தவர்களின் உடல் ஐஸ் கட்டிகளின் மீது வைக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே ஆஸ்பத்திரி சவச்சாலையில், இறந்தவர் ஒருவரின் உடல்

திறந்தவெளியில் ஐஸ் கட்டிகளின் மீது கிடத்தி வைத்திருப்பது போன்ற வீடியோ சமூக வலைதளத்தில் தற்போது வைரலாக பரவி வருகிறது.

புதுவை

அலைபேசியில் வித்தை காட்டிய குரங்கு

புதுவை கம்பன் கலையரங்கம் அருகே உள்ள தனியார் கட்டடம் ஒன்றின் மீது அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் சுமார் 60 அடி உயரத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட குரங்குகள் இருந்தன. அதிலொரு குரங்கு விலையுயர்ந்த அலைபேசியை வைத்து பார்த்துக்கொண்டிருந்தது.

இதனை, அந்த வழியாகச் சென்றவர்கள் தங்களது வாகனங்களை சாலையில் நிறுத்தி குரங்கின் செயற்பாடுகளை கவனித்தனர். தனியார் ஆஸ்பத்திரி கட்டடத்தில் பெயிண்ட் அடிக்கும் தொழிலாளி ஒருவர், தனது



துணிமணிகளுடன் வைத்திருந்த அலைபேசியை, குரங்கு தூக்கி சென்றிருப்பதும் தெரியவந்தது.

குரங்கிடம் இருந்து அலைபேசியை கைப்பற்ற தொழிலாளர்கள் பல்வேறு வகையில் முயற்சி மேற்கொண்டனர். அங்கிருந்த இளைஞன் ஒருவர், அழைப்பை எடுத்து பார்த்தார். சத்தம் கேட்கவே சற்று மிரண்டது. எனினும், பலவித வண்ணங்கள் தோன்றவே அதை ஆச்சரியத்துடன் திருப்பி திருப்பி பார்த்தது. ஆனால் அலைபேசியை மட்டும் அது விடுவதாக இல்லை.

கூட்டத்திலிருந்த ஒருவர் பட்டாசு வாங்கி வந்து கொளுத்தி குரங்கை நோக்கி வீசினார். வெடிச் சத்தத்துக்கு மிரண்டு போன குரங்கு, அலைபேசியை கீழே போட்டுவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டது. அது கம்பிகளுக்கு இடையில் சிக்கிக்கொண்டது. அதனை எடுக்க இளைஞன் ஒருவர் அந்தரத்தில் தொங்கியபடி சென்றார். எனினும், அலைபேசி தரையில் விழுந்து நொறுங்கியது.

பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

நாமலுக்கு இதயம் இருகின்றதா?

நாட்டு மக்கள் உணவுக்கே வழியில்லாது வீதிகளில் மடிந்து விழும் நிலையில், நாமல் ராஜபக்ஷ வினோத விளையாட்டுகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, நாமலுக்கு இதயமென ஒன்றிருந்தால் அவர் இவ்வாறு செய்வாரா? எனவும் கேள்வி எழுப்பினார்.

பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று (24) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டு மக்கள் வீதிகளில் இறந்து மடிந்து வீழ்ந்தாலும் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதை நிறுத்தப்போவதில்லை. நாட்டு மக்கள் மூன்றுவேளை உணவுக்குக்கூட வழியில்லாத நிலையில் வீதிகளில் மடிந்து விழுக்கிறார்கள். ஆனால், ஜனாதிபதியின் அண்ணன் மகனான அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, வினோத விளையாட்டுகளில் ஈடுபடுகிறார்.

நாடு எதிர்நோக்கும் இவ்வாறான நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் நாமல் ராஜபக்ஷவுக்கு இதயமென ஒன்று இருந்தால் இவ்வாறு செய்வாரா? எனவும் கேள்வி எழுப்பினார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஆளுங்கட்சியின் பின்வரிசைகளில் அமர்ந்து கொண்டு ஊழல்வாதிகளுக்கும் திருடர்களுக்கும் தண்டனை வழங்க வேண்டுமென நாம் கோரினோம். எனினும் திருடர்களுடன் தலைவர்கள் கொண்டிருந்த டீல்களால் எந்தத் தண்டனையும் வழங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

அமெரிக்காவிலிருந்து

ரூ.10 இலட்சம் கிடைத்தது

அண்மையில் எனக்கும் 10 இலட்சத்துக்கும் அதிகமான பணம் அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்டு இருந்தது. இந்தப் பணம் எவ்வாறு எனக்குக் கிடைத்தது? யார் அனுப்பினார்கள் என்றெல்லாம் என்னிடத்தில் வினவப்பட்டது. இவ்வாறான காரணங்களாலேயே புலம்பெயர் தமிழர்கள் நாட்டுக்குப் பணம் அனுப்பப் பயப்படுகிறார்கள் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று (24) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு நாட்டை ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களுமே பொறுப்புக்கூற வேண்டும். தமிழ் மக்களை அடக்கியாள முயற்சித்தவர்கள் அதன் பலனை தற்போது அனுபவிக்கிறார்கள். நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்களின் தவறானக் கொள்கைகளே நாட்டின் நிலைமைக்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும் என்றால் தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்க வேண்டும். புலம்பெயர் தமிழர்கள் பல நாடுகளில் பலமாக இருக்கிறார்கள்.

> **இந்தப் பணம் எவ்வாறு எனக்குக் கிடைத்தது? யார் அனுப்பினார்கள் என்றெல்லாம் என்னிடத்தில் வினவப்பட்டது**

அவர்களை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பதைப் பார்க்க வேண்டும்.

அண்மையில் எனக்கும் 10 இலட்சத்துக்கும் அதிகமான பணம் அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்டிருந்தது. இந்தப் பணம் எவ்வாறு எனக்குக் கிடைத்தது? யார் அனுப்பினார்கள் என்றெல்லாம் என்னிடத்தில் வினவப்பட்டது. இவ்வாறான காரணங்களாலேயே புலம் பெயர் தமிழர்கள் நாட்டுக்குப் பணம் அனுப்பப் பயப்படுகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

மக்களிடம் மன்னிப்பு கேட்டார் சானக்க

நாட்டு மக்கள் தற்போது முகங்கொடுக்கும் எந்தவொரு பிரச்சினைகளுக்கும் தற்போதைய அரசாங்கத்தின் தவறுகள் காரணமில்லை எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க, எவ்வாறாயினும் தற்போது மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்காக நாட்டு மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோருவதாகவும் தெரிவித்தார்.

பெறுமதிசசேர் வரி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று (24) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவி ஏற்கும்போது இருந்த நாட்டின் நிலைமையும் தற்போதுள்ள நாட்டின் நிலைமையிலும் பாரிய மாற்றங்கள் காணப்படுகிறது. கடந்த நல்லாட்சி அரசாங்கமே நாட்டை நாசம் செய்தார்கள். நல்லாட்சி அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன உரிமங்கள் வழங்கப்பட்டன.

எனினும் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ, பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என எவருக்கும் புதிதாக வாகனங்களை இறக்குமதி செய்யவில்லை.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை இருக்கிறது. மக்கள் வரிசைகளில் நிற்கிறார்கள். நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது. நாட்டு மக்களுக்கும் இதனால் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இது எமது

> **மக்கள் வரிசைகளில் நிற்கிறார்கள். நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது. இவை எமது அரசாங்கத்தின் தவறுகள் இல்லை. என்றாவும் நாம் மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கிறோம்**

அரசாங்கத்தின் தவறுகள் இல்லை. என்றாலும் அதற்காக நாம் மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கிறோம் எனத் தெரிவித்தார்.

சர்வகட்சியால் தீர்வு காண முடியாது

சர்வகட்சி மாநாட்டைக்கூட்டி நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வைக்காண முடியாதென திட்டவட்டமாக தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ சில்வா, அரசாங்கம் நிதி பற்றிய குழுவின் அழைப்பை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் புறக்கணித்துள்ளதாகவும், அவ்வாறு செய்வதற்கு கப்ராலுக்கு அதிகாரம் இல்லை எனவும் தெரிவித்தார்.

பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று (24) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை மத்திய வங்கிய ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், அரசாங்கக் நிதி பற்றிய குழுவுக்கு இன்று (24) அழைக்கப்பட்டிருந்தார். நாட்டின் நிதி அதிகாரம் கொண்ட குழுக்களில் அரசாங்க நிதி பற்றிய குழு முதன்மையானதாக இருக்கிறது. இவ்வாறான நிலையில், இக்குழுவுக்கு அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்டோர் வரவில்லை.

நாட்டின் நிதி நெருக்கடி நிலைமைகளை, சர்வகட்சி மாநாடு நடத்தி, தீர்வுகாண முடியாது. நிதி நெருக்கடியைத் தீர்ப்பதற்கான அதிகாரம், பாராளுமன்றத்துகே உள்ளது. நிதி பற்றிய குழுவின் அழைப்பை எவராலும் புறக்கணிக்க முடியாது. ஆனால் அஜித் நிவாட் கப்ரால் புறக்கணித்துள்ளார். எவ்வாறாயினும் கப்ராலை நிதி பற்றிய குழுவுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு

மூடுவிழா

டொலர் பிரச்சினையைக் காரணங்காட்டி உலக நாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களை அரசாங்கம் மூடி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில், தூதரகங்கள் மூடப்பட்டு வருகின்றமை தொடர்பில் எதிர்க்கட்சியினர் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது உரையாற்றிய லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி, ஈராக், நோர்வே, சைப்பிரஸ் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களை தற்போதைய அரசாங்கம் மூடியுள்ளது. சைப்பிரஸில் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் வாழ்கிறார்கள் எனவும் இதன்போது தெரிவித்தார்.

தூதரகங்களால் என்ன நன்மை என அரசாங்கம் கேட்கிறது. ஆனால், உண்மையில் டொலர் பிரச்சினை காரணமாகவே அரசாங்கம் தூதரகங்களை மூடி வருகிறது எனவும் தெரிவித்தார்.

மேலும், இந்தியா, சீனாவில் உள்ள இலங்கை தூதரகங்களை மாத்திரம் வைத்துவிட்டு, உலகின் ஏனைய நாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களை அரசாங்கம் மூடுவதற்கே முயற்சிக்கிறது. இலங்கைக்கு சீனா, இந்தியா இருந்தால் மாத்திரம்போதும். அரசாங்கத்தின் இதுபோன்ற முட்டாள்தனமாக செயற்பாடுகளை கண்டிப்பதாகவும் எதிர்க்கட்சியினர் சாடினர்.

ஆபிரிக்காவில் தூதரகம் அமைக்கும்போது, ஆபிரிக்காவுக்கு எதற்கு தூதரகம் என விமர்சித்தார்கள். இப்போது தூதரகங்களை மூடும்போது கேள்வி கேட்கிறார்கள். தேவையற்ற தூதரகங்களை மூடிவிட்டு, நாட்டுக்கு டொலரை சேமிக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சியினருக்கு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இதன்போது பதிலளித்தார்.

மேலும், உலக நாடுகளில் இலங்கைக்கென 65 தூதரகங்கள் காணப்படுகின்றன. இந்த 65 தூதரகங்களால் நாட்டுக்கு என்ன நன்மை கிடைக்கிறதென பார்க்க வேண்டும் எனவும் தெரிவித்த அவர், சிங்கபூரில் இலங்கைக்கென தூதரகமொன்று இல்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

கால்வாசி மூளை கூட பசிலுக்கு இல்லை

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு கால்வாசி மூளை கூட இல்லை என தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்கு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பெறுமதி சேர்வரி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று (24) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டை மாற்றியமைக்கக் கூடியவர் என பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவை தெரிவுசெய்தவர்கள், வெறும் இரண்டு வருடங்களுக்குள்ளேயே 'கோட்டா வீட்டுக்கு செல்லுங்கள்' எனக் கூறுகிறார்கள். நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை 'பொருளாதாரத்தைக் கொலை செய்த பசில் வீட்டுக்குப் போக வேண்டும்' என்கிறார்கள்.

ஏன் இந்நிலைமை ஏற்பட்டதென்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசையில் மக்கள் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்கள் இருளில் இருக்கிறார்கள். ஆனால், அரசாங்கம் இவற்றுக்குத் தீர்வை வழங்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

ஜனாதிபதிக்கு இது தொடர்பில் எந்தவிதமான பொறுப்பும் இல்லை. சீனாவில் விமானம் பற்றி எரிந்து, பலர்

> **சீனாவில் விமானம் பற்றி எரிந்து, பலர் உயிரிழக்கும்போது, டுவிட்டரில் கவலை தெரிவிக்கும் ஜனாதிபத், அரசாங்கம் உருவாக்கிய காஸ் வரிசைகளில் நின்று உயிரிழந்தவர்களுக்கு ஜனாதிபதி தனது கவலையை தெரிவிப்பதில்லை**

உயிரிழக்கும்போது, அதற்கு ஜனாதிபதி டுவிட்டரில் கவலையை தெரிவிக்கிறார். ஆனால், அரசாங்கம் உருவாக்கிய காஸ் வரிசைகளில் நின்று உயிரிழந்தவர்களுக்கு ஜனாதிபதி தனது கவலையை தெரிவிப்பதில்லை.

நாட்டு மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றால், நிதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கு முதலில் வர வேண்டும். நாட்டின் பொருளாதார கொலையாளி, மத்திய வங்கியின் ஆளுநர் கப்ரால். அவரே பொருளாதார நெருக்கடிக்குப் பிரதானமாகப் பொறுப்புக்கூற வேண்டியவர். ராஜபக்ஷர்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்குக் தள்ளிவிட்டு, அதைக் கண்டும் காணாதவகையில் இருக்கிறார்கள்.

ராஜபக்ஷர்களுக்கு ஆதரவாக எப்போதுமே செயற்பட்ட ஆளுங்கட்சியின் பின்வரிசைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, பசிலுக்கு ஏழு மூளைகள் இல்லை. கால்வாசி மூளைக்கூட இல்லை என்பது தெரிந்திருக்கும் என்றார்.

அரசியல் கைதிக்கு விரைந்து சிகிச்சையளிக்கவும்

பாரிசவாதம் நோய் ஏற்பட்டுள்ள அரசியல் கைதியான சிவலிங்கம் என்கிற மதகுரு, உயிராபத்தில் சிறைச்சாலையில் இருப்பதாக தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், விரைந்து அரசாங்கம் அவருக்கு சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பெறுமதி சேர்வரி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று (24) கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

> **கிளிநொச்சியை சேர்ந்த சிவலிங்கம் என்கிற மதகுரு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவருக்கு இப்போது பாரிசவாதம் நோய் ஏற்பட்டுள்ளது**

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிவலிங்கம் என்கிற மதகுரு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவருக்கு இப்போது பாரிசவாதம் நோய் ஏற்பட்டுள்ளது. எனினும் இவருக்கு இதுவரையில் சிகிச்சை அளிக்கப்படவில்லை.

இந்த அரசியல் கைதி, தற்போது உயிராபத்தில் இருக்கிறார். இவருக்கு சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதுபோன்ற பல அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் முறையாக எந்தவிதமான சிகிச்சைகளும் வழங்கப்படுவதில்லை.

அரசியல் கைதிகள் மிகக் கொடுரமான முறையில் சிறைச்சாலையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாகிஸ்தான்

பிரதமர் இம்ரானுக்கு

ரூ.50,000 அபராதம்

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியின் ஆட்சியே காரணம் எனக் குறை கூறி இம்ரான்கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்துள்ளன.

மேலும் ஆளும் கட்சியை சேர்ந்த 20க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இம்ரான் கானுக்கு எதிராக நிலைப்பாட்டை எடுத்திருப்பதால் அவரது ஆட்சி கவிழும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ‘ கடந்த 16ஆம் திகதி ஸ்வாட் நகரில் தேர்தல் விதிமுறைகளை மீறி பிரசார கூட்டம் நடத்திய குற்றச்சாட்டில் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அமைச்சர்கள் 5 பேருக்கு தலா 50,000 ரூபாய் அபராதம் விதித்து அந்நாட்டு தேர்தல் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி

வைரலாகும் ‘எலான் மஸ்கின்’ நடனம்

டெஸ்லா நிறுவனமானது உலகின் முன்னணி மின்சாரக் கார் உற்பத்தி நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்றது.

அந்தவகையில் ஜேர்மனியில் பெர்லினுக்கு அருகே டெஸ்லா நிறுவனத்தின் தொழிற்சாலை ஒன்று கடந்த 22 ஆம் திகதி திறக்கப்பட்டது.

இந்நிலையில் இத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட அந்நிறுவனத்தின் ஸ்தாபகரும் உலக பணக்காரர்கள் வரிசையில் முதல் இடத்தில் உள்ளவருமான ” எலான் மஸ்க் ”ஆடிய நடனமானது தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வியட்னாம்

வியட்னாம் அதிரடி

வியட்னாம் ஏர்லைன்ஸ் நிறுவனமானது ரஷ்யாவுடனான தனது விமானச் சேவையை இன்று (25) முதல் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளது.

ரஷ்யாவிற்கு தனது விமானங்களை இயக்குவதற்கான விதிமுறைகள் மற்றும் தேவைகள் குறித்த ஆலோசனைகள் நடத்தி வருவதாலேயே விமான சேவையை அந்நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளதாக அந்நாட்டு அரசு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

சோவியத் ஒன்றிய காலத்தில் இருந்தே ரஷ்யாவும் வியட்னாமும் நெருங்கிய நட்பு நாடுகளாக இருந்து வந்துள்ளதோடு, உக்ரேன் மீதாக ரஷ்யாவின் படையெடுப்பின் போதும் வியட்னாம் ரஷ்யாவிற்கு கண்டனம் எதுவும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

லண்டன்

சிறையில் காதலியை கரம் பிடித்த ‘ஜூலியன்’

பிரபல விக்கிலீக்ஸ் பத்திரிகையின் ஸ்தாபகரான ஜூலியன் அசாஞ்சே தனது நீண்ட நாள் காதலியான ஸ்டெல்லா மோரிஸை லண்டனில் இருக்கும் உயர்பாதுகாப்பு சிறையில் நேற்று முன்தினம் (23) திருமணம் செய்து கொண்டார்.

இவர்களது திருமணத்திற்கு சிறைத்துறை அனுமதி மறுத்ததால் சிறையில் கைதிகள் பார்க்கும் நேரத்தில் இருவரும் திருமணம் செய்துகொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து திருமணம் முடிந்த பின்னர் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் சேர்ந்து ஸ்டெல்லா மோரிஸ் கேக் வெட்டி கொண்டாடியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> **திருமணம் முடிந்த பின்னர் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் சேர்ந்து ஸ்டெல்லா மோரிஸ் கேக் வெட்டி கொண்டாடியுள்ளார்**

50 வயதான ஜூலியன் அசாஞ்சே தனது விக்கிலீக்ஸ் நிறுவனத்தின் மூலம் அரசாங்க ரகசிங்ககளை ஹேக் செய்தது தொடர்பான வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இவர்களது திருமணப் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

சீயோல்:



மீண்டும் புதிய ஏவுகணை சோதனை

உலக நாடுகளின் எதிர்ப்புக்கு மத்தியில் வடகொரிய புதிய ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. இதனை தென் கொரிய அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து தென்கொரிய இராணுவம் நேற்று (24) வெளியிட்ட அறிக்கையில்,

“வடகொரியா கிழக்கு கடற்பகுதியில் இன்று (நேற்று) ஊகிக்க முடியாத ஏவுகணை சோதனை ஒன்றை நடத்தியுள்ளது.

வடகொரியாவின் இந்த நடவடிக்கை கொரிய தீபகற்பம், பிராந்தியம் மற்றும் சர்வதேச சமூகத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது. வடகொரியா, ஐ.நா.வின் விதிமுறைகளை தெளிவாக மீறி வருகிறது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீவ்:

ரஷ்யாவின் குண்டுத்தாக்குதலில்

ரஷ்ய பத்திரிகையாளர் மரணம்

ரஷ்யாவின் புலனாய்வு இணையதளமான இன்சைடரைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் ஒக்சனா பவுலினா., கீவ் நகரில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்தபோது ரஷ்யாவின் குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு பலியானார்.

ரஷ்யாவின் புலனாய்வு இணையதளமான தி இன்சைடரில் பத்திரிகையாளராக பணிபுரிந்து வந்தார். கீவ் நகரின் போடில் மாவட்டத்தில் ரஷ்ய படைகளின் தாக்குதல் குறித்த சேதங்களை புதன்கிழமையன்று ஒக்சனா படம் பிடித்துக்கொண்டிருந்தார்.

அப்போது, குடியிருப்புப் பகுதிகள் மீது ரஷ்யப் படைகள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் அவரும்,பொதுமகனும் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என ‘தி இன்சைடர்’ நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கெதிரான

தொடரைக் கைப்பற்றிய பங்களாதேஷ்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், செஞ்சூரியனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மூன்றாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது. இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் அணித்தலைவர் தெம்பா பவுமா, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, தஸ்கின் அஹ்மட்டிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 37 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 154 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், ஜனமென் மலன் 39 (56), கேஷவ் மஹராஜ் 28 (39), டுவைன் பிறிட்டோறியஸ் 20 (29) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், தஸ்கின் அஹ்மட் 9-0-35-5, ஷகிப் அல் ஹஸன் 9-0-24-2, ஷொரிஃபுல் இஸ்லாம் 7-0-37-1, மெஹிடி ஹஸன் மிராஸ் 5-0-27-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 155 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், அணித்தலைவர் தமிம் இக்பாலின் ஆட்டமிழக்காத 87 (82), லிட்டன் தாஸின் 48 (57) ஓட்டங்களோடு 26.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் தஸ்கின் அஹ்மட் தெரிவானார்.

கண்ணகி மாட்டுவண்டில் சவாரி திடல் திறப்பும்

மாட்டுவண்டில் சவாரிகளும்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு வற்றாப்பளை நந்திக்கடல் கரையில் அமையப்பெற்ற கண்ணகி மாட்டுவண்டில் சவாரித்திடல் திறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க. விஜிந்தன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம. உமாமகள் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

சவாரி திடல் திறப்பு நிகழ்வைத் தொடர்ந்து வட மாகாணத்தைச் சேர்ந்த மாட்டுவண்டிச் சவாரியாளர்கள் கலந்துகொண்டு மாட்டுவண்டி சவாரிப் போட்டி நடைபெற்றது.

வட மாகாணத்தைச் சேர்ந்த 72 சோடி மாடுகள் இதில் கலந்து கொண்டிருந்தன. அ, ஆ, இ, ஈ, உ எனப் பிரிவுகள் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இதன்போது அ- பிரிவில் முதற்பரிசான தங்கப்பதக்கத்தை யாழ்ப்பாணம் சங்குவேலியைச் சேர்ந்த கே. சந்திரன் பெற்றுக் கொண்டார்.

ஆ-பிரிவில் தங்கப் பதக்கத்தை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த விக்னேஸ்வரன் பெற்றுக் கொண்டார்.

இ-பிரிவில் தங்கப் பதக்கத்தை மல்லாவி முல்லைத்தீவைச் சேர்ந்த த. மனோசாந் பெற்றுக் கொண்டார்.

ஈ-பிரிவில் தங்கப் பதக்கத்தைச் யாழ்ப்பாணம் பொன்னாலையைச் சேர்ந்த க. றிஜிதா பெற்றுக் கொண்டார்.

உ-பிரிவில் தங்கப் பதக்கத்தை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முகேஸ் பெற்றுக் கொண்டுள்ளார்.

கையில் மாடு கொண்டு ஓடுதல் போட்டி மற்றும் வேகம் குறைவாக மோட்டார் சைக்கிள் ஓட்டுதல் போன்ற போட்டிகளும் நடைபெற்றிருந்தன.

அம்பாறை ஏ பிரிவு கழகங்களுக்கிடையிலான தொடர்:

இறுதிப் போட்டியில் கல்முனை சனிமௌன்ட், மருதமுனை எவரெடி

ஏ.எல்.எம். ஷினாஸ்

அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட லீக் நடாத்தி வருகின்ற மாவட்டத்திலுள்ள ‘ஏ’ பிரிவு கழகங்களுக்கிடையிலான தொடரின் இறுதிப்போட்டிக்கு கல்முனை சனிமௌன்ட், மருதமுனை எவரெடி விளையாட்டு கழகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்தாண்டு நடைபெற்ற இத்தொடர் கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக இடை நிறுத்தப்பட்டு இருந்தது. இந்நிலையில் முதலாவது அரையிறுதிப் போட்டி சனிமௌன்ட்ம, ருதமுனை கிறீன்மெக்ஸ் விளையாட்டு கழகங்களுக்கு இடையில் கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இப்போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் சனிமௌன்ட் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டி, எவரெடி , கல்முனை பிர்லியன் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றது. கழகங்களுக்கு 2 கோல்களையும் எவரெடி விளையாட்டுக் கழகத்தினர் போட 2-0 என்ற கோல் கணக்கில் எவரெடி விளையாட்டு கழகம் இறுதிப் போட்டிக்கு தெரிவானது. இப்போட்டியில் பிர்லியன் விளையாட்டு கழகத்தின் இரண்டு வீரர்கள் சிவப்பு அட்டை போடப்பட்டு மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டிக்கு பிரதம நடுவராக அம்பாறை மாவட்ட நடுவர் சங்கத்தின் உறுப்பினர் ஏ.எம். ஜெப்ரான் கடமையாற்றினார்.

இறுதிப்போட்டி கல்முனை சனிமவுண்ட் விளையாட்டு கழகத்திற்கும் மருதமுனை எவரெடி விளையாட்டு கழகத்திற்கும் இடையில் விரைவில் நடைபெறவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 25 மார்ச் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.